பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 26 வெள்ளிக்கிழமை (12-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:320

### தேர்தலில் இணைந்து போட்டியிட

## நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டணி அமைக்க முயற்சி!

கொழும்பு,ஒக்,12

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதை அடுத்து கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

பொதுத் தேர்தலில் தனித்தும் கூட்டணிகளாகவும் களத்தில் குதிப்பதற்கான முயற்சிகள் தொடர்பாக கட்சிகள் தனித்தனியாகவும், ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடல்களையும், ஆலோசனைகளையும் நடத்திவருகின்றன.

தேர்தலை எப்படி எதிர்கொள்வது எனபது தொடர்பாக தமிழ்க் கட்சிகளும் தமக்குள் கலந்துரையாடல்களை நடத்த ஆரம்பித்திருக்கின்றன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகக் கட்சிகளும் ஓரணியில் இணையும்?

கொழும்பு,ஒக்.12

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மலையகத் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக மலையகக் கட்சிகள் அனைத்தையும் ஓரணியில் போட்டியிட வைக்க முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது.

இதன் ஒரு கட்டமாக மலையகத்தின் பிரதான கட்சிகளான இ.தொ.காவும் மலையக மக்கள் முன்னணியும் நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றன.

இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடி உள்ளனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் இரு தலைவர்களும் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர். மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகாக்க வசதியாக (12 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவிப்பு:

# ஐ.தே.கட்சி ஆட்சி அமைத்தால் விடுதலைப் புலிகளோடு பேச்சு!


### குமார் கொலை சந்தேக நபர் பிணையில்!

கொழும்பு,ஒக்.12

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றினால் பிணையில் செல்லல அனுமதிக்கப்பட்டுள்ளார். நாணயக்கார என்ற இந்த நபருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

வீட்டில் இருந்து காரில் அழைத்துச் செல்லப்பட்ட குமார் பொன்னம்பலம் வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து காருக்குள்ளேயே சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே. (ஐ-10)

## தமிழர்களுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படும் என்கிறார் ரணில்



கொழும்பு,ஒக்ரோபர்12

**★ எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமக்கு அமோக வெற்றி வாய்ப்பு உண்டு என நம்புகிறோம்.**

**★ ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு தீர்வு காண விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சு நடத்தும்.**

**★ தமிழ் மக்களுக்கு கூடிய அதிகாரப் பகிர்வை வழங்கி தொடரும் யுத்தத்துக்கு முடிவு கட்டுவோம்.**

**இவ்வாறு உறுதிபடத் தெரிவித்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் கொழும்பில் நேற்று தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர்களுடன் கூட்டாக நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே ரணில் விக்கிரமசிங்க இதனை அறிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து வெளியேறிய முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்கா, (12 ஆம் பக்கம் பார்க்க)

### குடும்ப அரசியலைப் பேணுவதற்காக

## அனுரா பண்டாரநாயக்கா எந்நேரமும் கட்சி மாறலாம்?

கொழும்பு,ஒக்.12

ஐ.தே.கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரரும் முன்னாள் சபாநாயகருமான அனுரா பண்டாரநாயக்கா பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து கொள்ள இருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நேற்று பரவலாகப் பேச்சடிபட்டது.

இது தொடர்பான செய்திகளை கொழும்பில் இயங்கும் சில தனியார் வானொலிகளும் சூசகமாக வெளியிட்டன. எனினும் இது தொடர்பாக உறுதியான தகவல் ஏதும் வெளியாகவில்லை.

பண்டாரநாயக்கா குடும்பத்தைச் சேர்ந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரம் உட்பட பல பகுதிகளும் நேற்று ஹர்த்தாலால் செயலிழப்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.12

வீதிப போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து குடாநாட்டில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவினரின் ஏற்பாட்டில் இந்தக் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் ஹர்த்தாலினால் யாழ். நகரப் பகுதி உட்பட குடாநாட்டின் பல பிரதேசங்களும் நேற்று செயலிழந்தன.

யாழ். நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதால் நகரப் பகுதி வெறிச்சோடியது. பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் இயங்கவில்லை. போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பித்ததால் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்த நோயாளர்களின் எண்ணிக்கையும் குறைந்து காணப்பட்டது.

யாழ்புறநகர்ப் பகுதிகளில் காலையில் கடைகள் திறக்கப்பட்டிருந்த போதும் பின்னர் அவை மூடப்பட்டன. பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள் இடைவழியில் வீடு திரும்பினர். சில இடங்களில் மாணவர்களை வழிமறித்த சிலர் அவர்களை வீடுகளுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. சில பாடசாலைகளில் மாணவர்கள் வரவு குறைந்து காணப்பட்டதால் நேர காலத்துடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக் கொல்லப்பட்டவர் ஈ.பி.டி.பி. உறுப்பினராம்!

### ஊடகத் தகவல் நிலையம் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.12

யாழ். நகரில் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த தொண்டர் ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்திருக்கின்றது.

ஊடகத் தகவல் நிலையம் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு வெளியிட்ட களநிலைவர அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரால், யாழ்.நகரப் பகுதிக்கு அண்மையில் உள்ள கஸ்தூரியார் வீதி - நாவலர் வீதிச் சந்தியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் - கொல்லப்பட்டவர் ஸ்ரீகாந்தன் விமலேஸ்வரன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் -

ஊடகத் தகவல் நிலைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ஒ)

### வவுனியாவில் குண்டு மீட்பு

வவுனியா.ஒக்.12

வவுனியாவில் தனியார் பஸ்கள் நிறுத்தப்படும் தரிப்பிடப் பகுதியில் நேற்றுக்காலை சக்தி வாய்ந்த குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

பொதுமக்கள் படையினருக்கு அறிவித்ததை அடுத்து அங்கு வந்த படையினர் குண்டை மீட்டு செயலிழக்கச் செய்தனர். (ஐ-10)

## ஆட்சிக்கு வரும் அரசை ஆதரிக்க 5 நிபந்தனைகள்

### இப்போதே ரெலோ முன்வைப்பு

பொதுத் தேர்தல் மூலம் ஆட்சி அமைக்கவுள்ள அரசுக்கு ஆதரவு வழங்க ரெலோ ஐந்து நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இந்த நிபந்தனைகளை முன்கூட்டியே நேற்று அறிவித்துள்ளார்.

தாம் முன்வைத்துள்ள ஐந்து நிபந்தனைகளுக்கும் இணங்கக் கூடிய அரசுக்கு எந்த வகையிலேனும் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

★ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்.

★ போர் நிறுத்தத்தை உடன் அறிவிக்க வேண்டும்.

★ வன்னி மீதான பொருளாதாரத் தடையை உடன் நீக்கவேண்டும்.

★ விடுதலைப் புலிகளுடன் உடன பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

★ நோர்வே அரசின் உதவியுடன் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும்.

இவையே தமது அமைப்பு முன்வைத்துள்ள நிபந்தனைகள் என்று செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ஐ-3)

## கடைசி நேரத்தில் மங்களவுக்கு அமைச்சர் பதவி கிடைத்தது!

### பாரம்பரியத்தை மீறிய செயல் எனக் கண்டனம்

கடந்த புதன்கிழமை நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்குச் சில மணி நேரம் முன்பாக பிரதி அமைச்சரும் ஜனாதிபதியின் நெருங்கிய சகாவுமான மங்கள சமரவீர அமைச்சராக நியமிக்கப்பட்டதாக அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நள்ளிரவு தீர்மானத்தை எதிர்கட்சிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

அரசு கவிழும் இறுதி நேரத்தில் அமைச்சராக நியமனம் செய்யப்படுவது இலங்கை அரசியல் வரலாற்றில் முன் எப்பொழுதும் இடம்பெறவில்லை என்று ஐ.தே.கட்சியின் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

தேர்தலை எதிர்நோக்கி நிற்கும் ஒரு காபந்து அரசுக்கு புதிய அமைச்சரவையை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைக்காது என்றும் அவர் கூறினார். (ஐ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர்தின நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.
கூட்டத்துக்குத் தலைமை வகித்த வேலணைக் கிளையின் தலைவர் பொ.அருணகிரிநாதன், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சின்னத்தம்பி, சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், தீவக வலயப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் -
சங்கம் ஆரம்பிக்கவுள்ள இணையத்தளத்துக்கான நிதியை சேகரிப்பதற்காக நடத்தப்படும் கொடி விற்பனையை, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் மாணவி ஒருவருக்கு கொடியை அணிவித்து ஆரம்பித்து வைப்பதையும் - படங்களில் காணலாம். (ஐ-3)

# மீன் பிடிப்பதற்கான தடைகளை நீக்காவிட்டால் போராட்டம்!

## வடமராட்சி மீனவர்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

தென்மராட்சி,ஒக்.12

வடமராட்சிக் கடலில் மீன்பிடிப்பதற்குள்ள நெருக்கடிகளை அகற்ற ஏதுவான நடவடிக்கை எடுக்காவிட்டால், தாம் போராட்டத்தில் குதிக்கப் போவதாகக் கடற்றொழிலாளர் சங்கங்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

வடமராட்சிக் கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகள், கட்டுப்பாடுகளை நீக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு மேற்படிசங்கங்கள் ஒன்றிணைந்து அனுப்பிய மகஜரிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடமராட்சிக் கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்கு அடிக்கடி விதிக்கப்படும் தடைகளினால் கடற்றொழிலாளர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்தத் துன்பங்களிலிருந்து மீள்வதற்காக, வடமராட்சிக் கடற் பகுதிகளில் மீன்பிடிப்பதற்குள்ள கட்டுப்பாடு மற்றும் கெடுபிடிகளை நீக்கி சுதந்திரமாக கடற்றொழிலைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கடற்றொழிலாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தன.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி வழங்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை எழுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து -

"கடலில் மீன்பிடிப்பதற்கு சுமுக நிலையொன்றை ஏற்படுத்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்ட இரு வார காலக்கெடு நேற்று முன்தினம் புதன்கிழமையுடன் முடிவடைந்த போதும், அடுத்த வெள்ளிக்கிழமை வரை மேலும் ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காலக்கெடுவுக்குள் தகுந்த முடிவு கிடைக்காது விட்டால், கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் போராட்டத்தில் இறங்க நேரிடும்.

இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 17 கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பங்குபற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலேயே ஜனாதிபதிக்கு இந்த மகஜர் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு கடற்றொழிலாளர் சங்கங்கள் இணைந்து அனுப்பிய மகஜரின் பிரதிகள், கடற்றொழில் நீரியல்துறை அமைச்சர், வடக்கு புனர்வாழ்வு - புனரமைப்பு அமைச்சர், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.அரச அதிபர், யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் திணைக்கள அதிகாரி, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## வவுனியாவில் வாடகை சேவையில் ஈடுபடும்

# வாகன உரிமையாளர்களிடம் மோசடியாகப் பணம் வசூல்!

## இருவரை நீதிமன்றில் ஆஜர் செய்ய உத்தரவு

வவுனியா,ஒக்.12

வவுனியா மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் 65 வாடகை வாகனங்களின உரிமையாளர்களிடம் இருநது தினமும் ஐந்நூறு ரூபாவை சட்ட விரோதமாக அறவிட்டு வந்ததாகக் கூறப்படும் வாடகை வாகன உரிமையாளர் சங்கத்தின் தலைவரையும், பொருளாளரையும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு வவுனியா பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

வாடகை வாகன உரிமையாளர்களை அச்சுறுத்திப் பணம் வசூலிக்கும் செயலில் வாடகை வாகன உரிமையாளர் சங்கத்தின் தலைவரும் பொருளாளரும் ஈடுபட்டு வருவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுதது அது தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிவான் ஏற்கனவே பொலீஸாரைக் கேட்டிருநதார்.

இதன்பிரகாரம் பொலீஸாரால் நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஆராய்ந்த நீதிவான் சம்பந்தப்பட்ட இருவரையும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார்.

இவர்கள் இருவர் மீது பல குற்றச்சாட்டுக்களின் பேரில் வழக்குத் தொடரப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## ம.ஐ.முன்னணி இன்று முடிவு

கொழும்பு,ஒக்.12

எதிர்வரும் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து மக்கள் ஐக்கிய முன்னணி போட்டியிடும் என்று அதன் தலைவரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

கட்சியின் செயற்குழு இன்று கூடி இதுபற்றி இறுதிமுடிவு எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3-10)

## படுகாயம்

அல்வாய் வடக்கைச் சேர்ந்த பரமசோதி வாமதேவன் (வயது35) என்ற சீவல் தொழிலாளி, கடந்த செவ்வாய்க்கிழமை பனை மரத்திலிருந்து இறங்கும் போது, கால் தவறி விழுந்து படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-117)


உ
சிவமயம்

**சனிஸ்வர தோஷ நவக்கிரக சாந்தி ஹோம பூசை**

நாளை ( .10.2001) சனிக்கிழமை புரட்டாதி சனிஸ்வர தோஷமும் நவக்கிரக சாந்தி ஹோமமும் வியாபாரிமூலை ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலயத்தில் நடைபெறும். காலை 9.00 மணியளவில் சனிஸ்வர பெருமானுக்கு அபிஷேகமும் விசேட பூசை என்பனவும் நிகழ உள்ளன.

நாட்டின் சமாதானம், அமைதி, சுபீட்சம் வேண்டி நிகழ இருக்கும் இந்த விசேட ஹோம பூசையில் பக்த அடியார்கள் தங்கள் பெயர் நட்சத்திரங்களைப் பதிவு செய்துகொள்ளவும்.

பிரம்மஸ்ரீ சி. வாசுதேவக் குருக்கள்
தலைமையில் இப்பூசை நடைபெறும்.

வீரபத்திர அருளாசி வேண்டிப் பிரார்த்திக்கும்:-
தீபன் தொலைத் தொடர்பு நிலையம்,
வியாபாரிமூலை, பருத்தித்துறை.
(C/18659)


# ஐ.தே.கவின் அவசர நடவடிக்கையால் சுதந்திர தேர்தலை நடத்தும் வாய்ப்புத் தவறிப் போய்விட்டது!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.12

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஐ.தே.க. மேற்கொண்ட அவசர நடவடிக்கையால் சுதந்திர ஆணைக் குழுக்கள் அற்ற ஒரு தேர்தலையே நாடு எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஜே.வி.பி. அமைப்பு இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கிறது.

ஐ.தே.க. அரசமைப்புக் கவுன்ஸில் அமைக்கும் வரை பொறுமையை இழந்ததால் நியாயமானதும் நீதியானதுமான முறையில் தேர்தல் நடத்துவதற்கு மிகுந்த சிரமத்தின் மத்தியில் அங்கீகாரம் பெற்றும் அதற்கான சுதந்திர ஆணைக்குழுவை அமைக்க முடியாமல் போய் விட்டதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இதனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் சந்தர்ப்பத்தையும் கடந்து அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்பையும் கூட இழக்க நேர்ந்துள்ளதாகவும் -

பொ.ஐ.முன்னணியில் 7 ஆண்டு கால ஆட்சியானது நாட்டின் அரசியலை ஒரு பலவீன நிலைக்கு கொண்டு வந்துள்ளதாகவும் -

இதனால் ஏற்படும் அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் பொ.ஐ.முன்னணி அரசே பொறுப்பு எனவும் -

ஜே.வி.பியின் அரசியல் பீடம் தெரிவித்துள்ளது. (ஐ-10)

# யாழ்.செயலக கன்ரீனில் பாவனைக்கு உதவாத மீன்ரின்!

## சுகாதார அதிகாரிகள் கைப்பற்றினர்

யாழ்.செயலகத்தில் இயங்கும் கன்ரீனில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மீன்ரின்களில் பாவனைத் திகதி காலாவதியான 14 மீன்ரின்களை சுகாதாரப் பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

அந்தக் கன்ரீனில் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படும் வகையில் உணவுப் பொருள்கள் திறந்த நிலையில் வைக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சுகாதார அதிகாரிகள் அங்கு சென்று திடீர் சோதனை மேற்கொண்ட போதே இந்த மீன்ரின்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திறந்த நிலையில் உணவுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தமை குறித்து கன்ரீன் நிர்வாகிகள் சுகாதார அதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டனர். (ஐ-3)


வடமராட்சி தொலைபேசி உரிமையாளர் சங்கம்

**விசேட பொதுக் கூட்டம்**

காலம்:-நாளை (13.10.2001) சனிக்கிழமை பி.ப.4.00 மணி.
இடம்:-"சதா பொன்ஸ்" கல்வி நிறுவனம், மாலிசந்தி.

WII System (மோட்டறோலா) தொலைபேசிப் பாவனையாளர்களின் பிரச்சினை சம்பந்தமாக ஆராயவேண்டியிருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிரதான வீதி,
நெல்லியடி,
T.P.PQ 3215, 07021.

செயலாளர்
வடமராட்சி தொலைபேசி,
உரிமையாளர் சங்கம்.
(C/18657)


## திருகோணமலையில் நடக்கும்

# ஆங்கில தினப் போட்டியில் பங்குபற்ற இங்கிருந்து 200 மாணவர் புறப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.12

வடக்கு - கிழக்கு மாகாணமட்ட ஆங்கிலதினப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200 மாணவர்கள், ஆசிரியர்கள் சகிதம் நேற்றுக் கப்பல்மூலம் திருமலை புறப்பட்டுச் சென்றனர்.

எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் திருகோணமலையில் இடம்பெறவுள்ள இப்போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு திங்கட்கிழமை திருமலை ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரியில் நடைபெறும். (க-9-ரி)


ENGLISH
SPOKEN & GRAMMAR

புதிய பிரிவு ஆரம்பம்

BY. BRITTO

இடம்: கொக்குவில்
(ஞானபண்டிதர்
பாடசாலைக்கு அருகில்)
ஆரம்பம்: 15–10–2001 (திங்.)
நேரம்: 3.00 (புதிய நேரம்)
(திங்கள்.புதன்)
(C/18649)



**கண்ணீர் அஞ்சலி**

வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
திரு.வே.தி. செல்வரத்தினம்
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி திருப்பதி முத்து
அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தாருக்கு அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள்.
யாழ்/குடத்தனை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை.
யாழ்/ ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை.
(C/18658)

## ஆப்கானிஸ்தான் மீது
# தரைவழித் தாக்குதலுக்கு தயாராகின்றது அமெரிக்கா

இஸ்லாமபாத்,ஒக்.12

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்றுவரும் இந்த வேளையில் தரைவழியாகவும் அந்த நாட்டின்மீது தாக்குதலை மேற்கொள்ள அமெரிக்கா தயாராகிவருகின்றது.

விமானத் தாக்குதல்கள் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் மூலம் தலிபான்களின் முக்கிய நிலைகளை நிர்மூலமாக்கிய பின்னர் இன்னும் ஓரிருதினங்களில் அமெரிக்கப்படைகள் தமது தரைவழித் தாக்குதலை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வான்வழியாக ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் தரையிறங்கி அங்கிருந்து அமெரிக்கப் படைகள் காபூல் நோக்கி முன்னேறக் கூடும். இதற்கு ஏற்றவகையில் துருப்புக்காவி ஹெலிகளும், விமானங்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் சிந்து மாகாண விமான நிலையம் ஒன்றில் அமெரிக்க விமானங்களும், படையினரும் காணப்பட்டதாக நேற்றுச் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆப்கான் மீதான தரைவழித் தாக்குதலுக்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாகவே அமெரிக்கப் படைகள் பாகிஸ்தானில் தரையிறங்கியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானுக்குள் புகும் அமெரிக்கப் படைகள் அந்த நாட்டின் பூகோள அமைப்புக் கருதி வடக்குக் கூட்டணியுடன் இணைந்தே செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ம-4)

# ஆப்கன் மீது அமெரிக்கா 'லேசர்' குண்டு வீச்சு!

தலிபான்களின் 'கொங்கிறீட்' காப்பரண்களையும், நிலத்தடிப் பதுங்கு குழிகளையும் தாக்கி அழிப்பதற்காக அமெரிக்கப் படையினர் 'லேசர்' குண்டுகளைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

இத்தகைய 'லேசர்' குண்டுகள் 'கொங்கிறீட்' காப்பரண்களையும் கட்டடங்களையும் ஊடறுத்து உள்ளே சென்று வெடிக்கக்கூடியது.

எத்தகைய பாதுகாப்பான காப்பரண்களையும் தாக்கித் தகர்த்து நிர்மூலமாக்கக்கூடிய சக்தி இந்த 'லேசர்' குண்டுகளுக்கு உண்டு.

நான்காவது நாளாக நேற்று அதிகாலை அமெரிக்க விமானப்படையினர் நடத்திய தாக்குதல்களின் போதும் இத்தகைய 'லேசர்' குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட தாக்குதலிகளில் தலிபான்களின் பெருந்தலைவர் முல்லா முஹமட் ஓமரின் நெருங்கிய உறவினர்கள் இருவர் உட்பட வேறுபலரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த நான்கு நாள்களாகத் தொடரும் தாக்குதல்களில் 70 பேர் உயிரிழந்துள்ளதாகத் தலிபான்கள் நேற்று அறிவித்தனர். (ம-9)

# பாகிஸ்தானுள் நுழைய தலிபான்கள் முயற்சி

இஸ்லாமபாத்,ஒக்.12

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருவதையடுத்து தலிபான் படையினர் பலர் எல்லைதாண்டி பாகிஸ்தானுக்குள் நுழைய முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பாகிஸ்தான் -ஆப்கானிஸ்தான் எல்லையில் எல்லைதாண்ட முயலும் தலியானகளுக்கும் அதனைத் தடுத்துநிறுத்த முயலும் பாகிஸ்தான் எல்லைக் காவற்படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டைகள் இடம்பெற்றுள்ளன.

இதேநேரம் -

அமெரிக்காவின் தாக்குதலுக்கஞ்சி ஆயிரக்கணக்கான மக்கள் கழுதைகளிலும் வண்டில்களிலும் தமது உடைமைகளை ஏற்றிக்கொண்டு ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறிவருகின்றனர்.

# 4 'பின்லேடன்கள்' நடமாட்டம்; அமெரிக்காவோ தடுமாற்றம்!

தன்னைப் போலவே தோற்றமுள்ள நான்கு போலி ஒஸாமா பின்லேடன்களை நடமாடவிட்டு, அமெரிக்க உளவாளிகளை இஸ்லாமியத் தீவிரவாதியான ஒஸாமா பின்லேடன் தடுமாறவைத்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் பாமீர் மலைப்பகுதியிலுள்ள குகை ஒன்றில் பின்லேடன் மறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது:

இதேசமயம் காபூலுக்கு 125 கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள ஜலலாபத் உட்பட வேறு சில நகரங்களில் பின்லேடன் வழக்கமாக உபயோகிக்கும் "டொயோட்டா" காரில் அவர் பயணிப்பதை நேரில் கண்டதாகப் பலர் கூறியுள்ளனர்.

இதிலிருந்து, குறைந்தது 4 பின்லேடன்களாவது நடமாடுவதாகக் கருதப்படுகிறது.

பின்லேடனின் முதல் மனைவியும் 5 பிள்ளைகளும் சவுதி அரேபியாவில் வசிக்கின்றனர். பின்லேடனின் மற்றைய 3 மனைவிகளும் 10 பிள்ளைகளும் அவருடனேயே உடன் உள்ளதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் தாக்குதல் தொடங்கிய பின்னர் பின்லேடனும் அவரது குடும்பத்தினரும்,

ஆப்கானிய கிராமப்புறம் ஒன்றுக்குச் சென்றுவிட்டதாகவும் -

அவர்கள் சிறிய விமானம் ஒன்றில் ஏறி மர்ம இடம் ஒன்றுக்குச் சென்றதாகவும் -

பாமீர் மலைக் குகையில் வாழ்வதாகவும் -

பல்வேறு தகவல் வந்துகொண்டிருக்கின்றன.

# தலிபான் - எதிரணி படைகள் மும்முனைகளில் கடும்சண்டை

இஸ்லாமபாத்,ஒக்.12

வடக்கு ஆப்கானிஸ்தான் மஷார் ஏ-ஷெரிவ்வின் தென்பகுதி, பாமியன் மாகாணம் ஆகிய பகுதிகளில் தலிபான்களுக்கும் வடக்கு எதிரணிக் கூட்டணிக்கும் இடையில் கடும் சண்டைகள் இடம்பெற்றுவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா தலிபான் இலக்குகள் மீது நடத்திவரும் தாக்குதல்களைப் பயன்படுத்தி தலைநகர் காபூலைநோக்கி விரைவில் முன்னேறுவதற்கான பகீரதப்பிரயத்தனத்தில் எதிரணிக் கூட்டணி ஈடுபட்டுள்ளது. அவர்களை முன்னேறவிடாமல் தடுத்து நிறுத்துவதில் தலிபான்கள் முழுமூசசாக ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில்-

தலிபான்களின் முக்கிய தலைவர்களின் ஒருவரான மௌலவி அப்துல்லா ஹரான் உட்பட 40 தலிபான் தளபதிகளும் 200 தலிபான் உறுப்பினர்களும் எதிரணிக் கூட்டணியில் இணைந்துவிட்டதாகவும் -

மஷார் ஏ - ஷெரிவல் இவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி தற்போது எதிரணிக் கூட்டணியின் கட்டுப்பாட்டில் வந்துள்ளதாகவும்-

இதனால் வடக்கு ஆப்கானிஸ்தானுக்கும் தெற்கு ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான தலிபான்களின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும்-

எதிரணியின் செய்தித்தொடர்பாளர் முகைதீன் மொகதி தெரிவித்தார்.

(ம-9)

## சீனா கண்டனம்

பெய்ஜிங்,ஒக்.12

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்களை சீனா கண்டித்துள்ளது.

பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று சீனா கேட்டுள்ளது.


# NSBயின் சேமிப்பு மாதம்

தேசிய சேமிப்பு வங்கி ஒக்ரோபர் மாதத்தை **"NSB சேமிப்பு மாதம்"** ஆகப் பிரகடனம் செய்துள்ளது.

சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக ஒக்ரோபர் மாதத்தில் NSB செயற்படுத்தவிருக்கும் சில பிரதான நிகழ்வுகள் வருமாறு:-

1. 27ஆவது ரிதிரேகா சீட்டுழுப்பு (18-10-2001இல்)
2. ஹப்பன் சலுகை அட்டை சீட்டுழுப்பு
3. NSB சேமிப்பு மாதத்தில் சேவை ஊக்குவிப்புத் திட்டங்களும் செயற்படுத்தப்படவிருக்கின்றன. ரூ.500/= அல்லது அதற்கும் கூடுதலான தொகையுடன் புஞ்சிஹப்பன் கணக்கொன்றை ஆரம்பிக்கும் அல்லது பிரார்த்தனா சான்றிதழ்களை சிறுவர்களின் சார்பில் கொள்வனவு செய்யும் பத்துப் பெற்றோர் அல்லது பராமரிப்பவர்கள் ரூ.10,000/= வரை வெல்லக்கூடிய வாய்ப்பு உண்டு. இதற்குத் தகுதி பெற, பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் தமது பெயர் விலாசத்துடன் புஞ்சிஹப்பன் கணக்கு இலக்கம் அல்லது பிரார்த்தனா சான்றிதழ் இலக்கத்தை சந்தைப்படுத்தல் பிரிவு, **NSB,** 255, காலி வீதி, கொழும்பு -3இற்கு அனுப்பி வைக்கவேண்டும்.
4. பெற்றோர் அல்லது பராமரிப்பாளரினால் புஞ்சிஹப்பன் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வருடம் **ஒக்ரோபர் மாதத்தில் பிறந்துள்ள** 200 அதிஷ்டசாலிக் குழந்தைகளுக்கு ரூ.500/= பெறுமதியான அன்பளிப்புச் சீட்டுக்கள் வழங்கப்படும். இவற்றைப்பெற பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பிக்கவேண்டும்.

இவற்றோடு செயற்படுத்தப்பட்டுள்ள மூன்றாவது சேவை ஊக்குவிப்புப் பற்றிய விவரங்கள் விரைவில் வெளியிடப்படும்.

இத்துரு மித்துரு, ஹப்பன் சலுகை அட்டையைப் பெற்றுக்கொண்ட வாடிக்கையாளர்கள் பின்வரும் ஸ்தாபனங்களில் அவற்றைக் காண்பித்து கழிவு விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம்.

| ஸ்தாபனம் | விலைக்கழிவு |
|---|---|
| 1. அஷ்டலஷ்மி புத்தகசாலை, *424C K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.* | 15% |
| 2. பூபாலசிங்கம் புத்தகசாலை, *பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.* | 10% |
| 3. மகாநதி புடைவையகம், *மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.* | 05% |
| 4. *Sujanas and Dress Point*, *மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.* | 10% |
| 5. "யாழ்பாண மின்னகம்", *ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* | 05% |
| 6. பெஷன் ஹவுஸ், *K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.* | 05% |
| 7. சிற்றி மெடிக்கல்ஸ், *ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* | 05% |
| 8. வினோ நகைப் பூங்கா, *கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* | 05% |
| 9. கபிலா காலணி அகம், *கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* | 05% |
| 10. *IIS* கொம்பியூட்டர் நிலையம் *(கொம்பியூட்டர் கற்கை நெறி)* | 50% |

எமதுகிளையில் இத்துரு மித்துரு, ஹப்பன் சலுகை அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் இதுவரை சலுகை அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் அலுவலக நேரத்தில் புத்தகத்துடன் வந்து (8.30 – 1.00 மணிவரை) அவற்றைப் பெற்றுக்கொள்வதுடன், சலுகை அட்டைக்கான அன்பளிப்புக்களையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விவரங்களுக்கு முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

NSB தேசிய சேமிப்பு வங்கி "உங்கள் குடும்ப வங்கி"

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாணம்.

(C/18647)

# யாழ். நீதிமன்றத்தில் மூவருக்கு கசிப்பு வழக்கில் அபராதம்

கசிப்பு வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட மூவருக்கு யாழ். மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி சரோஜினி தேவி இளங்கோவன் நேற்று அபராதம் விதித்தார்.

நல்லூர் சங்கிலியன் வீதியைச் சேர்ந்த சீனிவாசகம் நகுலேஸ்வரன், கோப்பாய் தெற்கு கட்டைப்பிராயைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை நாகேந்திரன் ஆகியோர் தலா 40 போத்தல்கள் கசிப்பை வைத்திருந்ததற்காக முறையே 30 ஆயிரம் ரூபாவும், 40 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

30 போத்தல்கள் கசிப்பை வைத்திருந்த யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சிவநாதன் சந்திரவதனன் என்பவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-4-ரி)

# ஸ்ரீபார்வதி வித்தியாலய மாணவர் மூவர் நேற்றுக்கைது!

யாழ்ப்பாணம், ஒக் 12

நாயன்மார்கட்டு ஸ்ரீபார்வதி வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மூவர் நேற்றுக் காலை பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாவலர் வீதி, நல்லூரைச் சேர்ந்த செல்வரட்ணம் கமல்ராஜ் (வயது 17), அரியாலையைச் சேர்ந்த சிவஞானம் சிவகுமார் (வயது 16) ஆகிய இருவரும் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியில் வைத்தும் — கொழும்புத்துறை ஏ. வி. றோட்டைச் சேர்ந்த நடராஜா அகிலகுமார் (வயது 16) என்பவர் அவரது வீட்டில் வைத்தும் — பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று மாணவர்களின் கைதுகள் தொடர்பாக வித்தியாலய அதிபரும், மாணவரின் பெற்றோரும் பொலீஸாருடன் தொடர்பு கொண்டுள்ளனர். (ஒ-4)

## ஆசிரிய கலாசாலை பரீட்சையில் தோற்ற வசதி

யாழ்ப்பாணம், ஒக். 12

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் கடந்த காலப் பரீட்சைகளில் நூனை சித்திபெற்றவர்களும் சித்தி பெறாதவர்களும் 2001 ஆம் ஆண்டுப் பரீட்சையில் தோற்ற விரும்பினால் தத்தமது விண்ணப்பங்களை இன்று அல்லது எதிர்வரும் திங்கட்கிழமை தம்மிடம் சமர்ப்பிக்கலாம் என்று கலாசாலையின் அதிபர்கள் கோரியுள்ளனர்.

இந்தப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ஐ-3)

## சமய சந்திகைகள்

யாழ்ப்பாணம், ஒக். 12

மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேய சுவாமி கோயிலின் சனீஸ்வர தோஷ சாந்தி ஹோம பூஜை நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமான பூஜைகளின் நிறைவாக நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆஞ்சநேய சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறும். (ஜ)

★ ★ ★

சனீஸ்வர மஹாயாகப்பெருவிழா பண்ணாகம் விசைத்துணை முருகமூர்த்தி கோயிலில் நாளை சனிக்கிழமை காலை 5.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இணுவில் தர்மசாஸ்த குருகுல அதிபர் சிவஸ்ரீ த. மகாதேவக்குருக்கள் தலைமையில் இவ்வைபவம் நடைபெறும். பிரதம சிவாசாரியராக கோயில் குருக்கள் சிவஸ்ரீ ச.மு. ரவிக்குருக்கள் கிரியைகளை நிறைவு செய்வார். (க-28)

கோப்பாய், ஒக். 12

சுன்னாகம் சூராவத்தை புனித நிரேசம்மாள் ஆலய நவநாள் திருப்பலியின் நிறைவு நாள் உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 7.30 மணிக்கு திருப்பலியும், அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் திருச்சொரூப ஆசிரும் இடம்பெறும்.

இவ்வைபவங்களை அருட்தந்தை இராஜசிங்கம் அடிகளார் நடத்தி வைப்பர். (க-72)

★ ★ ★

இருபாலை வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் சபரீச ஐயப்பர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை மாலை 5-00 மணிக்கு விசேட பூஜை ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஐயப்பன் பஜனை இடம்பெறும். (க-4)

# விளையாட்டு நிகழ்வுகள்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும், ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகள் 16 வயது, 18 வயது, 20 வயதுப் பிரிவினர்கள் இடையே நடைபெறும். (க-86)

★ ★ ★

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையேயான சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகள் 16 வயது, 18 வயது, 20 வயதுப் பிரிவினர்கள் இடையே நடைபெறும். (க-86)

★ ★ ★

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம், பாடசாலைகளுக்கிடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4-00 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் மோதவிருக்கின்றன. (3)

யாழ். வலயத்தில் கடந்த மாதம் செய்யப்பட்ட

# இடமாற்றங்களினால் பாதிப்புற்ற ஆசிரியருக்கு விரைவில் நிவாரணம்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். கல்வி வலயத்தில் கடந்த மாதம் அமுல் செய்யப்பட்ட உள்ளக இடமாற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்க மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் உறுதியளித்துள்ளார்.

தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பான பணிப்புரையை மாகாணக் கல்விப் பணிப்பாளர் யாழ். வலயப் பணிப்பாளருக்கு விடுத்துள்ளார் என்றும் —

பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வலயக் கல்விப்பணிப்பாளருக்கு எடுத்துக்கூறி நிவாரணம் பெற முடியும் என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். கல்வி வலயத்தில் அண்மையில் இடமாற்ற விதிகளுக்கு முரணாக ஆசிரியர்கள் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதை ஆசிரியர்களும் தமிழர் ஆசிரியர் சங்கமும் கடுமையாக ஆட்சேபித்திருப்பது தெரிந்ததே. (ஐ-3)

## பூட்டியிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டு

வலி. கிழக்கு, ஒக். 12

யாழ். இராமலிங்கம் வீதியில் பூங்கா ஒன்றின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது.

நேற்று மாலை 4.30 மணியளவில் வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த புகைப்படப்பிடிப்பாளரான தனஞ்சன் என்பவர் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திப் பூட்டிவிட்டு பூங்காவினுள் சென்றதாகவும் —

பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்ததாகவும்— கூறப்படுகிறது. (ஒ-180)

தம்புள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டி

# 15 வயதுக்குட்பட்டோர் அணி; தெரிவுப் போட்டி இன்று

எதிர்வரும் 16 ஆம் திகதி தம்புள்ளவில் இடம்பெறும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவிருக்கும் 15 வயதுக்குட்பட்ட — யாழ். அணியைத் தெரிவு செய்வதற்கான தெரிவுப் போட்டி இன்று காலை 9 மணி முதல் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அணியில் இடம்பெறவுள்ள பாடசாலைகளின் வீரர்களை இந்தத் தெரிவுப் போட்டிக்கு சமூகம் அளிக்கும்படியும் —

சமூகம் அளிக்காதவர்கள் அணியில் இடம்பெறும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்றும் —

பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தலைவர் க. இராஜதுரை தெரிவித்துள்ளார். (ஐ-3)

## பற்றைகள் அழிப்பு

யாழ். பிரதான வீதியையும் உடுப்பிட்டி பிரதான வீதியையும் இணைக்கும் வீதியின் இருபக்கங்களிலும் வளர்ந்து வீதியை மூடி நின்ற பற்றைகள் தற்போது வெட்டப்பட்டு வீதி சீர் செய்யப்பட்டுள்ளது. (ஜ-31)

## தேர்தல் திணைக்களத்தில் மாநாடு

டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை ஆராய்வதற்கான மாநாடு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவினால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கூட்டப்படவுள்ளது.

தேர்தல் திணைக்களத் தலைமையகத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டுக்கு வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து மாவட்டங்களினதும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் அடிப்படையிலேயே வாக்களிப்பு நடைபெறவுள்ளது. (ஜ-10)

நாகர்கோவில் முன்னரங்கப் பகுதியில்

# பாதுகாப்புப் பணிக்குச் சென்ற சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்பு

நாகர்கோவிலில் முன்னரங்க காவலரணுக்கு கடந்த திங்கட்கிழமை இரவு பாதுகாப்புப் பணிக்குச் சென்ற சிப்பாயொருவர் மறுநாள் காலை காவலரணுக்கு அருகில் இருந்த பற்றை காட்டுப் பகுதியில் சடலமாகக் கிடந்தார்.

கடமைக்குச் சென்ற ஜீ. குணரட்ண என்ற இச் சிப்பாய் முகாமுக்குத் திரும்பி வராததால் இவரைத் தேடிச் சென்ற படையினர் பற்றை மறைவில் அவர் இறந்து கிடப்பதைக் கண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீதிவானுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து நீதிவான் நாகர்கோவில் முகாமுக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

சிப்பாயின் சடலத்தை அவரது சொந்த ஊருக்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# பார்வைக்கு முதலிடம் கொடுப்போம்!

'உலக பார்வைத் தினம்' இன்றாகும். அதனை ஒட்டி இந்தச் சிறுகுறிப்பு பிரசுரமாகின்றது.

1925 ஆம் ஆண்டு கெலன் கெல்லர் அம்மையார், லயன்ஸ் கழகங்களின் சர்வதேச மாநாட்டில், ஒரு வேண்டுகோளை விடுத்தார். கண் பார்வையற்றவர்களுக்குச் சேவை செய்யும் தொண்டர்களாக லயன்ஸ் கழகத்தினர்களைப் பணிசெய்யும்படி மிகவும் விநயமாக வேண்டினார். காந்தக்கவர்ச்சியாக பற்றிக்கொண்ட அவ்வேண்டுகோள், இன்று உலகளாவிய ரீதியில் லயன்ஸ் கழகத்தினர் 'பார்வைக்கு முதலிடம்' கொடுத்துப் பணி செய்ய ஊக்குவித்தது. ஒக்ரோபர் 12 ஆம் திகதியை உலகப் பார்வைத்தினமாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். ஒக்ரோபர் 15 ஆம் திகதியை சர்வ வியாபகமான வெள்ளைப் பிரம்புத் தினமாகத் தீர்மானித்து அந்நாளில் பார்வையற்றோருக்குப் பலவித பணிகளை அடையாளம் காட்டி வைபவமாகச் செய்ய முனைகிறார்கள் லயன்ஸ் கழகத்தினர்.

1990 ஆம் ஆண்டு 'பார்வைக்கு முதலிடம்' கொடுத்து ஆரோக்கியமான கண் பார்வையை மக்களுக்குத் தரும் வகையில் தம்பணிகளை முடுக்கிவிட்டு, கண் பரிசோதனை முகாம்களை மக்களிடையே நடத்தி, கண்ணாடிகளைப் பார்வைக்கு வழங்கி, சத்திர சிகிச்சைகளை செய்வித்து, மருந்துகளை வழங்கி, கண்வில்லைகளைப் பொருத்தி இன்னோரன்ன பணிகளைத் தொண்டாக ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக எல்லோருக்கும் வாரி வழங்குகிறார்கள். இப் பணிகளுக்குரிய முதலீடுகளையும் சேகரித்துக் கொடுத்தவர்களிடமிருந்து அறமாகப் பெறுகிறார்கள் அரிமாக்கள்.

கண் சத்திர சிகிச்சை நிபுணர் கலாநிதி ச. குகதாசன், கலாநிதி செல்வி சரவணமுத்து, உதவியாளர் ஜெயராசா, லயன் எஸ். எம். பெர்னாண்டோ எம். ஜே. எவ், எரிக் கணேஸ், கலாநிதி மயில்ேறும் பெருமாள், லயன் எஸ். எஸ். தங்கராச முதலியோர் இப்பணியில் யாழ். மக்களுக்குப் பெரும் பணியாற்றி வருகிறார்கள். கடந்த ஆண்டு 306B லயன் கவர்னர் லயன்ஸ் ரோகித்த உடவத்தை (M. J. F.) யாழ்ப்பாணம் வந்து யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் கண் சிகிச்சைப் பகுதிக்குப் பல லட்சம் பெறுமதியான உபகரணங்களை உலகளாவிய லயன்ஸ் கழகங்களின் சார்பில் வழங்கியிருக்கிறார். யுத்தம் நடந்துகொண்டிருக்கும் காலத்தில் இந்த பெரும் மனித சேவையை 306 B அரிமாக் கழகத் தலைவர் செய்திருப்பது பாராட்டுக்குரியது.

லயன் த. கைலாசநாதன்

தலைவர், இணுவில் லயன்ஸ் கழகம்

லயன்ஸ் பாராட்டுக்கல்லாமல் சேவைக்காகச் செய்திருப்பதும் மக்கள் பாராட்டும் செயலாகும்.

இப்பணியில் 306 B. தற்போதைய கவர்னர் லயன் உபாலி சமரசிங்காவும் யாழ்ப்பாணம் வந்து சேவையைத் தொடர்ந்து, நல்ல நாளையைக் காண்பதற்கு உதவுவாராக. ★

உதயன்

## நாடாளுமன்றக் கலைப்பு சரியான நடவடிக்கையே!

எல்லாம் எதிர்பார்க்கப்பட்டபடி நடந்து முடிந்திருக்கின்றது.

கடந்த வருடம் ஒக்ரோபர் 10 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடந்து முடிந்து முடிவுகள் வெளியானபோதே இந்த நாடாளுமன்றம் தனது பதவிக்காலம் முழுவதும் நின்று தாக்குப் பிடிக்காது என்பது அரசியல் அவதானிகளுக்கு ஓரளவு ஊர்ஜிதமாகிவிட்டது. ஆனால் இவ்வளவு விரைவில் - சரியாக ஒரு வருட காலத்துக்குள் - அதன் ஆயுள் காலம் முடியும் என்பதை யாரும் அப்போது எதிர்பார்க்கவில்லைத்தான்.

எனினும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சரவையிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் வெளியேற்றப்பட்டபோதே இந்த அரசு கவிழ்ந்து விடும்; நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விடும் என்பதெல்லாம் பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ஆனாலும் நாடாளுமன்றத்தை இரண்டுமாத காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கும் தனது அதிகாரத்தின் மூலமும் -

கொள்கை ரீதியில் ஒன்றுபட்டுச் செயற்பட முடியாத பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் புரிந்துணர்வு என்ற பெயரில் ஓர் ஒப்பந்தத்தைச் செய்ய வைத்ததன் மூலமும் -

இந்த நாடாளுமன்றத்திற்கு சுமார் மூன்றரைமாத காலம் ஜனாதிபதி செயற்கைச் சுவாசத்தை வழங்கி அதன் ஆயுள் காலத்தை நீடிக்க வைத்தார்.

இந்த அரசைத் தக்கவைப்பதற்கு ஜனாதிபதியும் அவரது பரிவாரங்களும் பகீரதப் பிரயத்தனம் செய்த போதும், அவர்கள் சிகிச்சையளிப்பதில் கையாண்ட முறையை நோக்கிய போது 'சுகம் வரும்; ஆள் தப்பாது' என்ற நிலைமை ஓரளவுக்குத் தெளிவாகிவிட்டது.

பொ.ஐ.மு. - ஜே.வி.பி. இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், இந்த அரசு தேசிய நல்லிணக்க அரசாக சுமார் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கும் என்று கூறப்பட்டாலும் ஐந்து வார காலம் கூட அதனால் தாக்குப் பிடிக்க முடியாமற்போயிற்று.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசு தோற்கடிக்கப்பட்டாலும் கூட, இந்த நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதியும், பிரதமரும், ஜனாதிபதிக்கு நெருக்கமான பிரதி அமைச்சர் மாங்கள சமரவீரவும் கூறியதாக கடைசி நேரம் வரை பல்வேறு செய்திகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தாலும் - யதார்த்தத்தில் அப்படி நடக்க வாய்ப்பில்லை என்று நேற்று முன்தினம் இப்பத்தியில் நாம் குறிப்பிட்டது போல - அந்தக் கூற்றுக்கள் எல்லாம் வெறும் அரசியல் 'ஸ்ரண்ட்' என்பது நிரூபணமாகிவிட்டது.

நாடாளுமன்றத்தில் ஐ.தே.கட்சி தலைமையிலான எதிரணிக்கு பெரும்பான்மை இருப்பதால் - பொ.ஐ.முன்னணி தனது பெரும்பான்மையை இழந்துவிட்டதால் - அந்த அரசு இராஜினாமாச் செய்து, ஐ.தே.கட்சி தலைமையில் அரசு அமைக்க வாய்ப்பளித்திருக்கலாம் என்ற ஒரு வாதம் சிலரால் இப்போது முன்வைக்கப்படுகின்றது.

ஆனால் ஒரு கட்சி அல்லது அணி ஆட்சி அமைப்பதற்கு அந்த அணியூடாக மக்கள் ஆணை பெற்று வந்தவர்கள், அதிருப்திக் குழுவாக மாறி, கட்சி தாவி, அவர்களது ஆதரவுடன் பிறிதொரு கட்சி அல்லது அணி ஆட்சி அமைப்பது சட்டப்படி நியாயமாக இருந்தாலும், தர்மப்படி சரியான செயலாக ஏற்றுக்கொள்ள முடியாது. அதை விடுத்து, மக்களிடம் புதிய ஆணை கேட்கப்போவது சரியான - சிறந்த - நடவடிக்கையே.

அந்த வகையில் ஜனாதிபதி குமாரதுங்க எடுத்த நடவடிக்கை நியாயப்படுத்தக் கூடியது.

ஆனாலும் தேர்தல் உட்பட நான்கு விடயங்கள் தொடர்பான சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுமா? அதன் மூலம் பொதுத் தேர்தல் நீதியாக - சுதந்திரமாக - சுயாதீனமான - முறையில் நடத்தப்படுமா? இல்லை, கடந்த பொதுத்தேர்தலின் போது நடந்தது போல இம்முறையும் குளறுபடிகளும், முறைகேடுகளும் கட்டவிழ்த்து விடப்படுமா? - இவைதான் இப்போது நம்முன் உள்ள கேள்விகளாகும்.

## புதிய கல்விச் சீர்திருத்தங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துக!

### மாகாண அமைச்சின் செயலர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஒக்,12

1998ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தக்கொள்கைகளை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன் வலயக கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வடக்கு - கிழக்கில் உள்ள சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் படி வலயக்கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள் என்ற பெயரிலேயே கல்வி நிலையங்கள் இயங்க வேண்டும்.

ஆனால் பெரும்பாலான இடங்களில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் தமது அலுவலகப் பெயர்ப்பலகைகளிலும், தாம் பாவிக்கும் இறப்பர் முத்திரைகளிலும் இதுவரை அந்த மாற்றங்களைச் செய்யவில்லை.

எனவே விரைவில் வலயக்கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம் என்ற பெயர் மாற்றங்களைச் செய்விக்கவும்.

- என்று அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7-51)

### படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்,12

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரின் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு "I DREAMED OF AFRICA" எனும் திரைப்படம் புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(க)

## நாட்டு நடப்பு

மரகதம் என்பாள் தன்னை
மணவறைக்குக் கூட்டிச் செல்ல
தரையின் மேல் விழுந்தாள் மங்கை
தலைசுற்றிச் சத்தியும் எடுத்தாள்
தரகரைக் கூட்டி வந்து
'தக்கதோ உன்செயல்?' என்றார்கள்
'பரபரப்படைய வேண்டாம்
பக்குவமாய்ச் சொல்லக் கேளும்
முப்பது வயதும் மூன்று மாதமென்றே
முன்னரே சொன்னேன்' என்றார்
இப்பதம் கேட்டோரெல்லாம்
இடம்விட்டு அகன்று சென்றார்.

*- விகடகவி.*

## அடிமைத்தனத்தில் இருந்து பெண்களை விடுவித்தது எமது விடுதலைப் போராட்டமே

### முள்ளியவளை நிகழ்வில் தமிழ்ச்செல்வன்

யாழ்ப்பாணம்,ஒக்.12

அடிமைத்தனத்தில் இருந்து பெண்கள் விடுதலை பெற வழி வகுத்தது விடுதலைப் போராட்டமே. இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் முள்ளியவளையில் ஆய்வுப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்தில் பெண்கள் மத்தியில் ஏற்படக்கூடியமாற்றமே உறுதியானதும் பலமானதுமாக இருக்கும். முழுச் சமுதாயத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அதுவே அடிப்படையாகவும் அமையும்.

உலகத்தில் தமிழீழத்திலேயே முதற்றடவையாக பெண்கள் மத்தியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழீழப் பெண்கள் மத்தியில் இன்னமும் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் செயற்பட்டு வருகிறார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் முதன்முதலாகப் பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டபோது சமூகத்திலிருந்து அவர்கள்மீது பல்வேறு விமர்சனங்கள் எழுப்பப்பட்டன. இன்று போராட்டத்தில் மட்டுமல்லாது சகல துறைகளிலும் அவர்கள் முன்னணியில் இருக்கின்றார்கள்.

முன்னைய காலத்தில் அடிமைப் படுத்தப்பட்டு வரையறுக்கப்பட்ட கடமைகளோடு மட்டும் கட்டுப்பட்டிருந்த பெண்களை அதிலிருந்து விடுவித்து சகல வளர்ச்சிகளுடனும் நிமிர்ந்து நிற்கும் நிலையை விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தியுள்ளது.

உலகப் பெண்ணினத்துக்கு இது ஒரு முன்னுதாரணமாகவும், படிப்பினையாகவும் அமைந்திருக்கின்றது.

ஆகவே தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் நம் எல்லோர் மனதிலும் உறுதி எடுத்துக்கொள்ளும் நாளாக அமையவேண்டும். நாம் விரைவில் விடுதலை பெற வேண்டும். இந்த விடுதலைக்குப் பின்னர் தான் எமது வாழ்வு உறுதிப்படப் போகிறது. எமது இலட்சியத்தில் உறுதியாக இருந்தால் நாம் எல்லோரும் மகிழ்ச்சியாக இருப்போம்.

எமது விடுதலையை வென்றெடுக்க எல்லோரும் அணிதிரண்டால் மிகவும் குறுகிய காலத்தில் வெற்றி பெறலாம்.

மட்டக்களப்பில் அதிகமான தாய்மார் தமது பிள்ளைகளைத் தாமாகவே போராட்டத்தில் இணைக்கின்றனர். இந்த நிலை எல்லா இடமும் ஏற்படவேண்டும்.

- இவ்வாறு தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

(க-7-4)



புதிய ஜெனரேட்டர்மூலம் காரைநகர்ப் பகுதிக்கு மின் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மின் விநியோக ஆரம்ப வைபவம் அண்மையில் நடைபெற்றது. வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந.திரிலோகநாதன் மின் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

பிரதேச மின் அத்தியட்சகர் பொ.சண்முகானந்தசிவம் மற்றும் காரைநகர் கடற்படை அதிகாரி உட்படப் பலர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த ஜெனரேட்டரை காரைநகர் மக்களுக்கு வழங்கியுள்ளார். (ஐ)

### கௌரவிப்பு

சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட அதிபர்கள் சங்கம் கடந்த திங்கட்கிழமை அன்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்திய உலக ஆசிரியர் தின விழாவில் 25 வருட கால சேவையைப் பூர்த்தி செய்த 14 ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத் தலைவரும், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபருமான கு.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக வணிகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் க.சிவராசா கலந்துகொண்டார்.(க-135)

### நெல் விதைப்பு

கடந்தவாரம் பெய்த கடும்மழையை அடுத்து நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர்ப் பகுதிகளில் நெல் விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் பலரும் தமது நிலங்களை உழுது பண்படுத்தி நெல் விதைப்புப் பணிகளை ஆரம்பித்திருப்பதைக் காணமுடிகிறது. (க-7-110)

### நாளை

புரட்டாதி 27
சனிக்கிழமை
திதி :ஏகாதசி
முற்பகல் 10.58 வரை
நட்சத்திரம் : மகம்
முன்னிரவு 8.21 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 3.02 - 4.32
ராகுகாலம் : 9.02 - 10.32
(பழைய நேரப்படி)

### வாழைச் செய்கையாளர் பெரிதும் பாதிப்பு

நீர்வேலி, ஒக்,12

அண்மையில் வீசிய பலமான காற்றினால் நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி மற்றும் நவக்கிரிப் பகுதிகளிலுள்ள பெரும்பாலான வாழைத் தோட்டங்களில் உள்ள வாழைகள் முறிந்துள்ளன.

இதனால் வாழைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (க-7-110)

### இளைஞர்களுக்கு ஊர் மக்கள் பாராட்டு

கோப்பாய்,ஒக்.12

கோப்பாய்ப் பகுதியில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பான சூத்திரதாரிகளைத் தேடிக் கண்டுபிடித்தது மற்றும் கசிப்பு விற்பனையைக் கட்டுப்படுத்தியது போன்ற துணிச்சலான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அவ்வூர் இளைஞர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களை பிரதேச மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

இதேவேளை -

இளைஞர்களுக்கு அங்குள்ள பல்வேறு அமைப்புக்களும் உதவியும், ஒத்தாசையும் வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(க-72)

### உதயவாக்கு

குறை கூறுவதைக் காட்டிலும் மிகவும் கடினமான காரியம் சரியான விதத்தில் ஒருவரைப் புகழ்வதாகும்.

### பிரதேச செயலர் பிரிவுகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு 10 ஆயிரம் ரூபா!

யாழ்ப்பாணம்,ஒக் 12

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கென தலா பத்தாயிரம் ரூபாவை வழங்கவுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்படும் விளையாட்டு உபகரணங்களை பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் இயங்கும் பயிற்சி நிலையங்களில் ஆவணப் படுத்த வேண்டும் என்றும் -

ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் கடன் அடிப்படையில் விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்துவிட்டு, யாழ்மாவட்டச் செயலகத்தில் உரிய பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்து தமக்குரிய காசோலைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

யாழ்.செயலகம் அறிவித்துள்ளது. (க-7)


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

தேவனே!
யுத்தம் நடந்த இடத்துக்கு மிக ஆவலாய்
என்னுடைய வீட்டைப் பார்க்கப் போகிறேன்
எனது கால்களை நீதான் காத்தருள வேண்டும்....



# வலிந்து தாக்கும் சம்பவங்களில் காயமடைவோர் எண்ணிக்கை உயர்வு

யாழ்.போதனா வைத்தியசாலை பல நெருக்கடிகளின் மத்தியில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்றும், இங்கு காலத்துக்குக்காலம் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். இது உண்மைதான்.

ஆனால், இம்மருந்துகளுக்கு என்ன நடக்கிறது, வைத்திய வளங்கள் எதற்காகக் கூடுதலாகச் செலவிடப்படுகிறன என்று பார்க்கும்போது தான் அதிசயிக்கும் இன்னொரு உண்மை வெளிபடுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலை

## யாழ்.ஆஸ்பத்திரி மருத்துவ வளத்தில் பெரும்பகுதி இதனால் விரயம்

யில் பலநூறு பேர் ஒவ்வொருநாளும் உள், வெளி நோயாளர் பிரிவுகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். கடந்த ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்



களில் முறையே 161, 151, 145 பேர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு, இவர்களின் முறைப்பாடுகள் சட்ட வைத்திய அதிகாரியின்(J.M.O.) கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றில், விபத்துக்கள் (Accidents), வீதிவிபத்துக்கள் (Road Accidents), தற்கொலை (Suicide), வலிந்து தாக்குதல் (Assault) போன்றவற்றோடு இன்னும் சில அடங்கும்.

சட்ட வைத்திய அதிகாரியின் கணிப்பின்படி, மேற்சொன்னவற்றில் ஏறத்தாள மூன்றில் இரண்டு(2/3) வலிந்து தாக்குதல் (Assault) முறைப்பாடுகளாகவே இருக்கின்றனவாம். அதாவது, உளக்குத்து உட்பட வாள் வீச்சுக்கும், வெட்டுக்கும், கத்திக் குத்துக்கும், தடி அடிகளுக்கும், இரும்புக் கம்பிகளால் அடிபட்டதும், பதுங்கியிருந்து தாக்கியதும் என்று தாக்குதல விதங்கள் நீளுகின்றன.

தனிப்பட்ட தகராறுகள், உள் வீட்டுப் பிரச்சினைகள், அயல்வீட்டுச் சச்சரவுகள், குழுக்களுக்கிடையிலான மோதல்கள் என்று சொல்லி இச்சண்டைகள் நடைபெறுகின்ற விதமும், தரமும் மிகத் துரிதமாக, அதி உச்ச வேகத்தில் இடம்பெறுகின்றன.

இதிலிருந்து பிறக்கும் திடுக்கிடும் மற்றய தகவல் என்னவென்றால், இப்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களில் மூன்று அல்லது நான்கு பேராவது இறந்துவிடுகிறார்கள் என்பதுதான். உதாரணமாக, ஜூலை மாதத்தில் 161 பேரில் 106 பேர் வலிந்து தாக்குதல்களுக்கு (Assault) உள்ளானவர்கள். அதில், 3, 4 பேராவது இறந்து போகிறார்கள். இப்படி, சராசரியாக ஒவ்வொரு மாதமும் சம்பவங்கள் நடைபெறுகின்றன இச்சிறிய குடாநாட்டில்!...

இன்னொரு சந்தர்ப்பத்தில், யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை விடுதி (WARD) ஒன்றில் முப்பத்தெட்டு (38) பேர் சிகிச்சை பெற்று வந்தனர். அதில் இருபத்தைந்து (25) பேர் வலிந்து தாக்குதல்களுக்கு (Assault) உள்ளானவர்கள். இதனை வேறொரு முறையிற் சொன்னால், அப்போது அவ்விடுதியின் சுமார் 65 வீதமான வைத்திய வளம் இவர்களுக்காகச் செலவிடப்பட்டிருக்கும்.

இப்பிரச்சினைக்குப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும் மிக முக்கிய காரணியாகத் தாராளமான கசிப்பு உற்பத்தியும், அதன் பாவனையுமே என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அத்துடன் யாழ்.குடாநாட்டில் தற்போது கேட்கும் இடத்தில் கசிப்பு கிடைக்கக்கூடிய சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது.

கசிப்பு உற்பத்தி தடைசெய்யப்பட்ட வழிவகைகளையும், கிராமம் தோறும் கசிப்பு எதிர்ப்பு விழிப்புக் குழுக்களை ஏற்படுத்துவது கோடிட்டுக் காட்டப்படாமலே துரிதகதியில் செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்களாக எம்முன்னே இருக்கின்றன. இல்லையேல் காட்டுத் தீ போல், கசிப்புத் தீ பரவி வீடும் அழிந்து, குடாநாடும் நாசமாகிவிடும். *கண கெட்ட பின் சூரிய நமஸ்காரம* போல் ஆகிவிடும். *வெள்ளம் வரும் முன்பு தான் அணைகட்ட வேண்டும்.*

வலிந்து தாக்குதல்களுக்கு (Assault) மற்றய காரணியாக இடம்பெயர்வு அமைகிறது. வீட்டுக்கான சண்டையிலிருந்து வேலிவரை சென்று, அதன்பின்னர் கிணற்றுப் பாவனையே மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கின்றது. இவ்வுண்மையை யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியும் உறுதிப்படுத்துகின்றார். அதாவது இடம்பெயர்ந்த

**செ.அன்புராசா**
*ஆன்மகுரு,*
*புனித வேளாங்கண்ணி ஆலயம்,*
*போதனா வைத்தியசாலை.*

நான்கு, ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒரே கிணற்றைப் பாவிப்பதில் பிரச்சினைகள் ஆரம்பித்து, அடிபிடியில் தொடங்கி, சில சந்தர்ப்பங்களில் வாள் வீச்சிலும் முடிகின்றனவாம்.

கிணற்றுப் பிரச்சினை தீர ஏதும் வழி உண்டா? உண்டானால், வாள் வீச்சும் கத்திக் குத்தும் கொஞ்சமாவது குறையும் என எதிர்பார்க்கலாம். அப்படியாயின், வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடும் அடிக்கடி ஏற்படாது.

ஈழத்தில் வாழுகின்றவர்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை எம்மவர்கள் இப்போது வெளிநாடுகளிலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கு வாழ முடியாது என்று இரண்டு, மூன்று தசாப்தங்களாக எம்மக்களில் பலர் வெளிநாடுகளில் தஞ்சம் கோருகின்றார்கள். இவர்களில் எமக்குத் தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், உறவினர்கள் என்று அநேகர் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் தமது 'கைவரிசை'யை வெளிநாடுகளிலும் காட்டத் தொடங்கிவிட்டார்கள். என்றுமில்லாதவாறு கடத்தல், கொலை, கொள்ளை, குழுமோதல்கள் என்று கேள்விப்படுகின்றோம். இந்நிலை தொடருமானால், பாய், படுக்கையோடு இவர்கள் திரும்ப வேண்டிய நாள் வெகுதொலைவில் இல்லை என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயம் அல்ல!.... அப்படி ஒரு நிலை வந்தால், எமது பிரதேசங்களின் வைத்தியசாலைகளிலுள்ள 'வெட்டு, கொத்து' விடுதிகளையே விஸ்தரிக்க வேண்டிவரும்!..... அத்துடன், உலகில் 'குத்து, வெட்டி'ல் நாமே முதலிடம் பெறுவோம்!....☆



**யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரையின் 54ஆவது அகவை நிறைவு விழா அண்மையில் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக வணிக வியற்றுறைத் தலைவர் க.தேவராஜா விழாநாயகருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் நல்லை ஆதீன முதல்வர் அமர்ந்துள்ளார். (ஐ-7)**


## சேவைநலன் பாராட்டுவிழா




**திரு. ஏரம்பு தியாகராஜா**
(ஆரம்ப பிரிவு
பகுதித்தலைவர்,
யாழ்.மத்திய கல்லூரி)

*இடம்:* **யாழ்.மத்திய கல்லூரி** (ஆரம்ப பிரிவு)
*காலம்:* *இன்று (12.10.2001) வெள்ளிக்கிழமை*
*நேரம்:* *மதியம் 12மணி*

இந்நிகழ்வில் ஆரம்ப பிரிவுப் பிள்ளைகளின் பெற்றோர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- வரவேற்புபசாரக்குழு.

(93294)


## தொழில் திறன் பயிற்சி நெறி இறுதிப் பரீட்சை

குருநகர்.ஒக்.12

கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்றிறன் பயிற்சிநெறிகளுக்கான இறுதிப்பரீட்சை அடுத்த மாதம் (நவம்பர்) 24, 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்வித்திணைக்கள முறைசாராப் பிரிவு அறிவித்துள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தாம் பயிற்சிநெறியைப் பின்பற்றிய பாடசாலை அதிபர் ஊடாக இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை யாழ்.வலயக் கல்வி அலுவலக முறைசாராப் பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றி சித்தியடையத் தவறியிருப்பின், பின்பற்றிய பயிற்சி நெறியைக் குறிப்பிட்டு, தான் கற்ற பாடசாலை, ஆண்டு என பவற்றைக் குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-51)


## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி சத்தியரூபா குணநாயகம்**

*மகளே. இக்கணமும் உன் இழப்பை உண்மையென யார் நினைப்பார்*
*எக்கணமும் உன் நினைவே என்னுயிரே என் மகளே!*
*விண்ணுலகில் சாந்தி பெற எம் அஞ்சலியை ஏற்றிடுவாய்!*

உன் நினைவாய் வாடும்:
**அம்மா**
**அண்ணன்மார், அக்கா, அண்ணிமார், அத்தான், பிள்ளைகள்.**

*46/2, சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
(93313)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர்**
**கணபதி மகேந்திரம்**

| பூவுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 1959-01-11 | 2001-09-12 |

எம்மை வாழவைத்த தெய்வம் இன்று வானம் சென்றதேனோ?
உம்மை நினைந்து நாம் உருகியே துடிக்கின்றோம் அப்பா!
அந்தப் பொல்லாத காலன் உங்களை எங்களிடமிருந்து பிரித்துவிட்டான்
ஆனால், எம் உள்ளத்திலிருந்து உம் நினைவைப் பிரிக்கவே முடியாது!
*ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
பாசமிகு **மனைவி, பிள்ளைகள்.**

*புதிய செம்மணி வீதி,*
*ஆனந்தபுரம்.*
(93290)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| ஜனனம் | அஸ்தமனம் |
|---|---|
| 18 - 10 - 1911 | 05 - 10 - 1999 |

**அமரர்**
**செல்லப்பா மாணிக்கவாசகர்**
*(இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)*
திதி: ஏகாதசி 12.10.2001

பப்பா! நீங்கள் மறைந்து இரண்டு ஆண்டுகள் சென்றுவிட்டன
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நீங்கள்
எம்மேல் காட்டிய நிகரற்ற அன்பையும்
பாசத்தையும் நினைத்து நாம் ஏங்குகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
*பாசம்மிக்க*
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*மாசேரி,*
*வரணி.*
(93279)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1913 - 09 - 26 | 2001 - 09 - 11 |

**திருமதி அன்னம்மா வல்லிபுரம்**

*எமது குடும்பத்தின் திருவிளக்கே - அம்மா!*
*ஓவென்று நாம் கதறியழ ஓடி மறைந்தீரே எம் கண்முன்னே!*
**என்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்து**
**ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (12-10-2001) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்தி வழிபாடு ஆகியவற்றிலும், தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**த.வல்லிபுரம்**
(இளைப்பாறிய ஆசிரியர்-கணவர்)
**வ.உதயகுமார்** (மகன்)
**வ.அரியபுத்திரன்** (மகன்)

*பிரிவால் துயருறும்:*
**கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(C/18588) *சங்குவேலி, மானிப்பாய்.*

# சைவத்தின் மாண்பை மதித்து நடந்தால் தெய்வத்தின் திருவருள் நிச்சயம் கிட்டும்

ஞானக்கதிர்

**சைவ** மக்களாகிய நாம் முதலில் சைவர்களாக வாழ்தல் மிகவும் அவசியம். 'சைவசமயி' என்று சொல்லிக்கொண்டு அதற்கு மாறாக நாம் நடப்போமேயாயின் அதைவிடப் பாவம் வேறில்லை. 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா' என்பதைப் போல, 'நான் சைவ சமயத்தவன்' என்று பெருமையுடன் கூறுவதற்குநாம் தகைமையுள்ளவர்களாக இருத்தல்வேண்டும். உரிமையுடன் வாழ்தல் வேண்டும். நாம் சைவத்தின் மாண்பை மதித்து நடந்தால் தெய்வத்தின் திருவருள் நிச்சயம் கிட்டும்.

அந்தந்த தகைமையை நாம் பெறுவதற்கு நம்மை நாமே தயார்படுத்திக்கொள்ளுதல் தக்கது. 'இது தீயது; இது நல்லது' என்று பிரித்தறியக்கூடிய நல்லதொரு பகுத்தறிவை மனிதன் கொண்டிருக்கிறான். அது இறைவன் நமக்களித் கொடை. அதன் மூலம் மனிதன் தன்னுடைய வாழ்க்கையை நெறிப்படுத்திக்கொள்கிறான்; செம்மையாக்கிக் கொள்கிறான்.

ஆகவே வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவனை என்றும் ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பவற்றை மனதில் நிலைநிறுத்தி நம்முடைய வாழ்க்கை 'வண்டியை நாம் நல்ல வழியில் செலுத்தப் பழகவேண்டும்; பழக்கவும் வேண்டும். இல்லறத்தில் கணவனும் மனைவியும் என்ற இரட்டை மாட்டு வண்டிதான் எமது வாழ்வு. அதிலே குடும்பம் என்ற சுமை ஏற்றப்பட்டு நன்மை தீமைகள் நிறைந்த - கரடுமுரடான - பள்ளமும் திட்டியும் நிறைந்த - சீரற்ற பாதையிலே வாழ்க்கைப் பயணம் நடைபெறுகிறது. இப்பயணத்தின் இடையிடையே இன்பமும் துன்பமும் மாறிமாறி வருகின்றன. அதைக்கண்டு நாம் துவண்டுபோகக் கூடாது; கலங்கக்கூடாது. துணிவோடு எதிர்நீச்சலடித்து துன்பங்களை எதிர்கொண்டு வாழ்தல் வேண்டும். அதுதான் சிறப்பு.

'தினை விதைத்தவன் தினையறுப்பான்' என்றபடி நாம் செய்த வினையை நாமே அனுபவிக்க வேண்டும். அதிலிருந்து எள்ளளவும் நாம் தப்பவே முடியாது. சுவரில் எறிந்த பந்து நம்மிடமே திரும்பி வருமாப்போல நாம் செய்தது நமக்குத்தான். இதை முதலில் நாம் அனைவரும் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். பச்சைக் கண்ணாடி அணிந்திருப்பவனுக்கு இந்த உலகமே பச்சையாகத்தான் தெரியும். இதை விளங்கிக் கொண்டவனுக்கு எல்லாமே புரியும்.

ஆகவே, சைவசமயத்தை அனுட்டிக்கும் நாம், அதன் மகிமையையும் மகத்துவத்தையும் அறிந்து, அதன் மேன்மையை மற்வர்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காக வாழ்ந்து காட்டுதல் வேண்டும். எப்படியும் வாழலாம் என்ற கொள்கையை விடுத்து, இப்படித்தான் வாழவேண்டும் என்று நம் முன்னோர் வகுத்தளித்த அறிவுரைப்படி நாம் வாழத்தலைப்படுதலே சிறந்தது. அதுவே நன்மை பயக்கக் கூடியதுமாகும். இதில் தளர்வு இருக்கக் கூடாது.

சைவ சமயத்திலே புலாலுண்ணுதல் அறவே விலக்கப்படுகிறது. புலால் உண்ணுதல் பாவமாகும். நாம எவற்றை உட்கொள்கிறோமோ அந்தக் குணம்தான் நமக்கு நடைமுறையில் வரும். இறைச்சி உண்டு வாழ்க்கையை நடத்துகின்ற சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, நரி முதலியவற்றைப் பாருங்கள்; இலை, புல் என்பவற்றைப் புசித்து வாழும் பசு, ஆடு, யானை, மான் போன்றவற்றையும் நோக்குங்கள். அதன் நடவடிக்கைகளிலிருந்து அவற்றின் குணவியல்புகளையும் அறியலாம். சைவ சமயத்தை அனுட்டிக்கும் நாம், சைவ சித்தாந்த முடிவுகளை உதாசீனம் பண்ணக்கூடாது. மற்றச் சமயத்தவர்கள் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்படியாக நடக்கக் கூடாது. எல்லோருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக நாம் வாழ்ந்து நல்ல உதாரண புருஷர்களாகத் திகழ்தல் வேண்டும்.

சைவப் புலவர்
**இராசையா ஸ்ரீதரன்**

'கடவுள் ஒருவர் இருக்கின்றார்; அவர் நம்மை வழிநடத்துகின்றார்' என்ற உண்மையை உய்ந்துணர்ந்து வாழ்ந்தால் பலவித நன்மைகளை நாம் அடையலாம். எனவே நாம் இனியாவது, நல்லவற்றைச் செய்து இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். 'புண்ணியமாம் பாவம் போம், போன நாள் செய்தஅவை மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்' என்பதை நினைவிற்கொண்டு நமது வாழ்வைச் சீரமைத்து, நாம் நல்ல மனிதர்களாக வாழத் தலைப்படுவோமாக. ☆

## தமிழீழப் பெண்கள் தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

வவுனியா,ஒக்.12

விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரரான 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் 14 ஆவது ஆண்டு நினைவு தினமான நேற்றுமுன்தினம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழீழ பெண்கள் எழுச்சி தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றது.

வன்னியில் பிரதேச ரீதியாக சிரமதானங்கள் மற்றும் எழுச்சிக் கூட்டங்கள், ஊர்வலங்கள், கலைநிகழ்வுகள் என்பன மிகவும் எழுச்சிபூர்வமாக நடைபெற்றுள்ளன.

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், அக்கராயன், விஸ்வமடு, தர்மபுரம், மல்லாவி, யோகபுரம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகள் மற்றும் பொதுஇடங்களில் மாலதியின் திருவுருவம் வைக்கப்பட்டு ஊர்வலங்கள் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இதேவேளை -

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழீழ பெண்கள் தினம் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. (ம-4)

## ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு

குருநகர்,ஒக்.12

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட தரம் 8, 11 விஞ்ஞான, தமிழ் மற்றும் ஆரம்பக் கல்விப் பாடங்களுக்குரிய செயலமர்வுகளில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-51)

## திருமலையில் நடந்த தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

திருகோணமலை,ஒக்.12

திருகோணமலை - அநுராதபுரம் வீதியில் அமைந்துள்ள வெல்வேரி விமானப்படை முகாம்மீது புதன் கிழமை அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின்போது 50 கலிபர் துப்பாக்கிகள் உட்பட சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

☆ 50 கலிபர் துப்பாக்கிகள் -2

☆ ஏ.கே.எல்.எம்.ஜி. இயந்திரத் துப்பாக்கிகள் - 3

☆ ரி.56 ரகத் துப்பாக்கிகள் - 2

☆ ஐ.60 மில்லி மீற்றர் கொமாண்டோ மோட்டார் - 1

☆ 50 கலிபர் பரல் - 1

50 கலிபர் முக்காலி - 1

☆ நடுத்தர ரவைகள், ரவைக் கூடுகள் மற்றும் சப்பாத்துகள், வானொலிக்கருவிகள், தளபாடங்கள் என்பன. (க-4)

## விசர்நாயினால் கடியுண்ட இளம்பெண் ஐந்து மாதங்களின் பின்னர் மரணம்

### கவனயீனத்தால் ஏற்பட்ட அவலம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

ஐந்து மாதங்களுக்குமுன் விசர்நாயினால் கடியுண்ட இளம் பெண் ஒருவர், விசர்நாய்க் கடிக்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்தைப்போடாது - கவனயீனமாக இருந்ததால் அந்நோய்க்காளாகி உயிரிழந்தார்.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த கருணாநிதி ஜெயமதி (வயது 19) என்பவரே கடந்த 7 ஆம் திகதி மரணமானவராவார்.

கடந்த 6 ஆம் திகதி திடீரென ஏற்பட்ட உடம்புளைவு, மூச்சுத்திணறல் போன்ற குறிகளைக் கண்டதும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் அங்கு மரணமானார்.(க-15)

## குரு ஆசி விழா

தென்மராட்சி,ஒக்.12

சாவகச்சேரி வித்தகம் குரு 'திருவருள் சுரபி' பரமசாமி அவர்களுக்கு அல்வாய் குமிழடி விநாயகர் ஆலயத்தில் குரு ஆசி விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ ஈஸ்வரசர்மா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் அருளாசி உரைகளை அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு, சிவஸ்ரீ இ. குமாரசாமிக் குருக்கள் ஆகியோரும் சிறப்புரைகளை ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு, சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அ.பிரேம்சங்கர் ஆகியோரும் நிகழ்த்துவர். (க-117)

## அபராதம்

தென்மராட்சி,ஒக்.12

கசிப்பு உற்பத்தி செய்த நபருக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கோ.வேலும் மயிலும் என்பவருக்கே கடந்த திங்கட்கிழமை இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. (க-117)


## உலக உளநல நாள் - ஒக்ரோபர் 10

### 2001ஆம் ஆண்டின் கருப்பொருள்

*'வேலைப்பளுவும் உளநலனும்'*

கணனித் தொழில்நுட்ப விருத்தி ஒரு கணத்தில் பல பிரச்சினைகளை வேலையாள்களின் மன நிலையை, உணர்வுகளை அறியாது வைக்கின்றது. இதனால் மன அழுத்தம் அதிகரிக்கின்றது. இவற்றைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

## தெய்வீக ஸ்தலங்களில்



வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் தேவஸ்தானத்தில் புதிய சப்பறம் அமைக்கப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற சப்பறத்திருவிழாவின்போது புதிய சப்பறத்தில் மூர்த்திகள் எழுந்தருளிய காட்சி. பரிபாலன சபை உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ)



யாழ்ப்பாணம் றக்கா றோட் புனித திரேசாள் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த மாதம் 23 ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருநாள் திருப்பலி முடிவில் புனித திரேசாளின் சொருப ஆசீரை குருமுதல்வர் செல்வராஜா அடிகளார் வழங்கும் காட்சி. (ஐ)



கந்தர்மடம் அரசடி வீதி ஸ்ரீசெல்வநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த உற்சவத்தின்போது அம்மன் வீதியுலாவாக எழுந்தருளி அருள் பாலிப்பதைப் படத்தில் காணலாம். (ஐ-135)



சங்கரத்தை வீரபத்திர சமேத பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு வெளிவீதி அமைப்பதற்குரிய காணி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி உதவியுடன் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்குரிய நிலத்தை அளவிடும் பணிகள் அண்மையில் நடைபெற்றன. வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் அப்பணிகளை மேற்பார்வை செய்வதைப் படத்தில் காணலாம். (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

S.நித்தியரூபனின் விசேட அ. அட்டை (இல.0903034572) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கோப் பாய் மத்தி கிராமசேவகரிடம் அல் லது சிவசுப்பிரமணியம், கோப்பாய் மத்தி, கோப்பாய் என்னும் முக வரியில் ஒப்படைக்கவும். (93295)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

ஒருமாத பிறிமா சிவப்பு - கறுப் புப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வம் மங்கள மாளிகை, மாயக்கை, பருத்தித்துறை. (93114)

### விற்பனைக்கு

நல்ல நிலையில், பாவனையி லுள்ள SIEMENS குளிர்சாதனப் பெட்டி (Double door) விற்பனைக்குண்டு. தொடர்பு:- 102, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (93314)

### வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி - தட்டாதெருச் சந்திக்கு அருகில் சகல வசதிகளு டன்கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- ச.தங்கராசா, 953, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (93334)

### தேவை

தொலைபேசி லைன் உரிமை மாறறம்செய்து விற்கவிரும்பின் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1374, மே/பா உதயன். (93327)

### பெற்றுக்கொள்ளலாம்

கந்தஷஷ்டி கவசம் நூல் இல வசமாகப் பெற்றுக்கொள்ள விரும்பு பவர்கள் தபால் தலையுடன் கூடிய கடித உறையை அனுப்பிப் பெற் றுக்கொள்ளலாம். ராஜமாதங்கன் ஏட்டுக் களஞ்சியம், பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில் தெற்கு. (93321)

### கொம்பியூட்டர் வகுப்புகள்

பிரத்தியேக கொம்பியூட்டர் வகுப் புகள் நடைபெறுகின்றன. முதலில் பழகியவர்கள் 'கீபோட் பிரக்டிஸ்' எடுபபதற்கும் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- 21, சீனியர் லேன, அரசடி றோட், யாழ்ப்பாணம். (93329)

### அபூர்வ ஜோதிடம்

சித்தரின் சித்துக்கள் வாய்ந்த ஏட்டின் மூலம் தீர்க்கப்படாத நோய் களுக்கு அற்புதமான தீர்வு. காண்ட முறையில் அதிர்ஷ்ட யோகபலன். சனி, ஞாயிறு 8.30 - 2.00 ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக் குவில் கிழக்கு. (93308)

### பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா இனப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு, வெள்ளையும் சேலான் இன புறொயிலர் குஞ்சுகளும் உடன் விற் பனைக்கு. வீ.குணபாகன், 1014, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (பெரிய புலம் பாடசாலை முன்பாக); இல.4, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி பாடசாலை அண்மையில் பெற்றுக் கொள்ளலாம். T.P.3353 (93340)

### வீடு வாடகைக்கு உடன் தேவை

இரண்டு பேர் கொண்ட ஒரு சிறிய குடும்பத்திற்கு சகல வசதி களுடன் கூடிய வீடொன்று உடன் வாடகைக்குத் தேவை. நல்ல வாடகை தரப்படும். தொடர்பு:-
விள.இல.1373,
மே/பா. உதயன். (93324)

## சனீஸ்வர ஹோமம்

13.10.2001 சனிக்கிழமை காலை - 8மணி தொடக்கம் ந.ப.12மணி வரை இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் நடைபெறும். தோஷமுள்ள அடியார்கள் பங்குகொள்ளவும்.

பிரதமகுரு
தாணு.வ.வாசுதேவக் குருக்கள் (93338)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**DRAGON MARTIAL ARTS SHOTOKAN KARATE DO** கழகம் அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்திய மாபெரும் கராத்தே சுற்றுப் போட்டியில் பதக்கங்களைவென்ற எமது தீவக கழக மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குறிப்பு: எமது கழகத்தினால் புதிய பயிற்சி வகுப்புகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு:-
1. எனஸ் தையலகம், வங்களாவடிச் சந்தி, வேலணை.
2. யூட் தையலகம், ஊர்காவற்றுறை.

(93336) ஆசிரியரும் சகமாணவர்களும், தீவகம்.

## கண்ணீர் அஞ்சலி

We Serve

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய செயலாளருமான

### அமரர் டாக்டர் த.பகீரதன்

அவர்கள் 11.10.2001 அன்று காலமான செய்தியைக் கேட்டு கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

தலைவர், அங்கத்தவர்கள்,
வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்.
(93331)

## இலங்கை வங்கி அலுவலக உதவியாளர் பரீட்சை 25இல்

யாழ்ப்பாணம்,ஒக்.12

இலங்கை வங்கியின் அலுவலக உதவியாளர் பயிலுநர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியான வர்களுக்குரிய எழுத்துப்பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரி வித்தன.

சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தகவல், தந்தி மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது. பரீட்சை அனுமதி அட் டைகளும் விரைவில் தபாலில் சேர்க கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலிருந்து சுமார் 42பேர் வரை தோற்றவுள்ள இப் பரீட்சையை யாழ். நகரில் நடத்து வற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (க-9-ரி)

## கணித, விஞ்ஞான வினா - விடைப் போட்டிகள்

வலிகாமம்,ஒக்.12

வலிகாமம் கல்வி வலயத்தில் கணித, விஞ்ஞான வினா-விடைப் போட்டிகள் நடத்தப்பட்டு, வலய, கோட்ட மட்டத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெறுபவர்கள் தெரிவுசெய்யப்பட்டு பாராட்டப்பட வுள்ளனர்.

சங்கானை, சண்டிலிப்பாய், உடு வில், தெல்லிப்பழை ஆகிய கோட் டங்களில் இம்மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒருமணி தொடக்கம் 3 மணிவரை இப்போட்டி கள் நடைபெறும்.

சங்கானை கோட்டத்துக்கு - வட் டுக்கோட்டை இந்துக் கல்லூரி யிலும் -

சண்டிலிப்பாய் கோட்டத்துக்கு - மானிப்பாய் இந்துக் கல்லூரியி லும் -

தெல்லிப்பழைக் கோட்டத்துக்கு - மல்லாகம் மகா வித்தியாலயத்தி லும் -

உடுவில் கோட்டத்திற்கு - இராம நாதன் கல்லூரியிலும் போட்டிகள் நடைபெறும். (க-152)

## செய்முறை பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

மட்டுவில் கமலாசினி வித்தியா லயம், மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம், சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயங்களில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற் றும் மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட் கிழமை சங்கீதமும், 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விவசாயம், மனைப்பொருளியல் ஆகிய பாடங் களும் நடைபெறும் என அதிபர்கள் அறிவித்துள்ளனர். (க-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.12

நாவற்குழி மகாவித்தியாலயத் திலிருந்து ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட் சையில் மனைப்பொருளியல், சங் கீதம், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றும் மாணவர் களுக்கான செய்முறைப் பரீட்சை கள் முறையே 16, 18, 19ஆம் திகதி களில் நடைபெறும் என அதிபர் பி.முத்துலிங்கம் தெரிவித்துள்ளார்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.12

அல்லாரை அரசினர் தமிழ் வித் தியாலயத்தில் இருந்து ஜி.சீ.ஈ. சாதா ரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கொற்றா வத்தை ஸ்ரடி சேக்கிளில் இயங் கும் மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 15ஆம், 16ஆம் திக திகளில் சங்கீதம், விவசாய விஞ் ஞானம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகளும், 18ஆம், 19ஆம் திக திகளில் மனைப்பொருளியல் பாடத் துக்கான பரீட்சையும் நடைபெறும். (க-7)

### கௌரி காப்பு

தேவஸ்தான நிர்வாகம், குருமார்கள் ஆகியோருக்கான கேதார கௌரிக் காப்பு முடிநத படி உள்ளது. கோண்டாவில் வாசுதேவக் குருக்கள் இல் லத்தில் பெற்றுக்கொள்ள லாம். விலை ரூபா 12/= (93339)

ஓம் ஸ்ரீ ராமஜெயம்

## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

ஸ்ரீ ரெங்கநாதர் கோபுர கட்டட நிதிக்காக இன்னிசைக் கச்சேரி

*இடம் :* ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபம்
*காலம்:* நாளை (13.10.2001) சனிக்கிழமை
*நேரம்:* பிற்பகல் 3.00மணி

**பிரவேசக் கட்டணம்: ரூ.50/=**

நாதஸ்வரக் கச்சேரி 3.00மணி - 5.00மணி
பிரபல நாதஸ்வர வித்துவான் திரு. N.K.பத்மநாதன் குழுவினர்
புல்லாங்குழல் கச்சேரி 5.00மணி - 7.00மணி
கோண்டாவில் நாதஸ்வர வித்துவான்

திரு. V.K.பஞ்சமூர்த்தி - புல்லாங்குழல்
திரு. V.R.ராதாகிருஷ்ணன் - வயலின்
திரு. S.துரைராஜா - மிருதங்கம்
திரு. P.K.அனந்தமோகன் - கஞ்சிரா
திரு. P.S.ராஜு - மோர்சிங்

*திரண்டு வருக! திருப்தி பெறுக!*

- திருப்பணிச் சபை.

*விளம்பர அனுசரணை:-* கொனிகா கலர்லாப்,
ஸ்ரீவேங்கடேஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். (C 18648)

## நெஞ்சகலா 6ஆம் மாத நினைவுநாள்

மண்ணில் 07 . 05 . 1951



விண்ணில் 12 . 04 . 2001

### அருள்திரு. பற்றிக் இம்மானுவேல்

(குணேன்)

*சீவியத்தில் இவரை நேசித்த நாங்கள்*
*இறை சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற*
*எங்கள் செபங்களைக் காணிக்கையாக்குகிறோம்.*

*54/3, புனித அன்னம்மாள் கோயில்*
*முன் ஒழுங்கை,*
*பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.* (93320)

என்றும் மறவா
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் கனிஷ்ட இடைநிலைப் பிரிவு உதவி அதிபர் திரு.கு.சிவகுமாரன் அவர்களின் அன்பு மாமனார்

அமரர்

### கிருஷ்ணபிள்ளை அம்பலவாணர்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்,
*யாழ்.மத்திய கல்லூரி.*
(93325)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லத்துரை பராசக்தி

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும், இந்தியா, திருச்சியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பராசக்தி நேற்றுமுன்தினம் (10-10-2001)இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - செல்லம்மா தம்பதியினரின் மூத்த மகளும், செல்வமலர், கனகராஜா, செல்வராஜா, சவுந்தரராஜா, மாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராஜா, ஜோதிராஜா, ரஞ்சா, மகேஸ்வரி, ராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராசாபூமணி, இராசலிங்கம் இராசமணி, பரமசாமி சகுந்தலாதேவி, செல்வி முத்துக்குமாரு செல்வராணி, ஜெயலிங்கநாதன் தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (11.10.2001) வியாழக்கிழமை திருச்சியில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*126/29,கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (93322)

*தகவல்:*
ஜெ.தவமணிதேவி
(சகோதரி)

### லயன் Dr.தங்கராஜா பகிரதன்

சித்தன்கேணியைச் சேர்ந்த லயன் Dr. தங்கராஜா பகிரதன் (ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி, சங்கானை) நேற்று (11.10.2001) வியாழக் கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராஜா - மகேஸ்வரி தம்பதி யினரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - கோமதி அம்மா தம்பதியினரின் அருமை மகனும், செல்வராணியின் அன்புக் கண வரும், உமையாளின் பாசமிகு தந்தையாரும், Dr.இராமச்சந்திரனின் (D.M.O., புத்தளம்) அன்பு மாமனாரும், வர்ஷினி, அபிநயன் ஆகியோரின் அன்புப் பேரனும், கனகசபை, காலஞ்சென்ற வைத்தியநாதன் மற்றும் சிறிஸ்கந்த ராஜா, திருமதி அ.தவராணி, திருமதி சி.தர்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருணாசலம், சிற்சபேசன், மங்கலிக்கா, சாந்தி, ஜொயிஸ், காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் சிவபாதசுந்தரம், கணேசன், காலஞ்சென்ற குமாரசுவாமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.10.2001) வியாழக்கிழமை அவரது கொழும்பு இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு முகவரி:-*
Mrs. Paheerathan Selvarani,
No.1, Quary lane, College St.,
Colombo - 13. T.P. No.: 434461

*தகவல்:-*
ஆ.பத்மநாதன் (நாதன்)
*சித்தன்கேணி.*
(93332)

## வெள்ளைப்பிரம்பு தினத்தில் ஒன்றுகூடல்

வலிகாமம் தெற்கு, ஒக். 12

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளைப்பிரம்பு தினமாகும். இதனையொட்டி மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் வாழ்வகப்பிள்ளைகளுடன் இணைந்து ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

நான்காவது ஆண்டாக மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினர் அதன் தலைவர் டாக்டர் லயன் செல்வி நவமலர் கனகரட்ணம் தலைமையில் இந்த ஒன்றுகூடலை நடத்துகின்றனர்.

வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு வாழ்வகப் பிள்ளைகளுடன் மதிய போசனம் அருந்துவதுடன் வெள்ளைப்பிரம்புகளும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. ஏனைய லயன்ஸ் கழகங்களின் அங்கத்தவர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றுவார்கள். (க-152)

# ஆண்கள் மதுபானம் அருந்துவதற்கு தூண்டுதலாகவுள்ள குடும்பப் பெண்கள்

## 'அகவொளி' கருத்தரங்கில் அதிர்ச்சி தரும் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 12

கிராமப் புறங்களில் உள்ள பெரும்பாலான ஆண்கள் மதுபானம் அருந்துவதற்கு அவர்களின் குடும்பத்திலுள்ள பெண்களே தூண்டுதலாக இருக்கின்றனர் என்ற உண்மை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டிருக்கிறார் 'சாந்திகம்' உளவளத்துணை நிலையத்தின் சமூக உளநல நிகழ்ச்சித் திட்டப்பணிப்பாளர் இர. சந்திரசேகர சர்மா.

கடந்த 2ஆம் திகதி 'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெற்ற முழுநிலா நாள் கருத்தரங்கில் கலந்துகொண்டு ''குடிபோதைப் பிரச்சினைகளும் இளைஞர்களும்'' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்..

'அகவொளி' நிலைய இயக்குநர் வண.எஸ். இராசதுரை அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமப்புறத்து ஆண்களில் பலர் கடின உழைப்பாளிகளாகவே இருக்கின்றனர். அப்படியானவர்கள் மது அருந்திவிட்டு வந்தால் அவர்களின் மனைவி, பிள்ளைகள் ஆகியோர் ''அவர் கஷ்டப்பட்டு வேலை செய்துவிட்டு வந்திருக்கிறார். எனவே உடம்பின் அலுப்புத்திர குடித்தால் பரவாயில்லை'' என்று கூறுகின்றனர். இவ்வாறு கூறுவது குடிப்பழக்கமுள்ள ஆண்களை மேலும் குடிக்கத் தூண்டுகின்றனர் அவர்கள்.

குடிப்பவர்களுக்கு அதனால் வரும் தீங்குகள் பற்றி சரியாகத் தெரிவதில்லை. அதனால் அவர்கள் மது அருந்துவது பிழை என்று கருதுவதில்லை. ஒரு குடும்பத்தில் யாராவது ஒருவர் குடித்தால் அந்தக்குடும்பமே நிம்மதி இழந்துவிடும். குடும்பத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றும்.

அது மட்டுமன்றி குடிப்பழக்கத்தால் சமூகத்துக்கே பல கேடுகள் — இடர்கள் வருகின்றன.

சகலவிதமான மதுபானங்களிலும் உடம்புக்குத தீங்கு விளைவிக்கக் கூடிய 'அல்கஹோல்' என்ற பதார்த்தம் உள்ளது.

ஆனால் கசிப்பு போன்ற தரம் குறைந்த மதுவகைகளில் மட்டும்தான் தீமை விளைவிக்கும் தன்மை உள்ளது என்றும் தரமான மதுபானங்களில் அது உடம்பை கெடுக்கக் கூடிய பதார்த்தங்கள் இல்லை என்றும் பலர் தவறாக நினைக்கின்றனர்.

மாணவர்கள், இளைஞர்கள் மத்தியிலும் இன்று குடிப்பழக்கம் அதிகரித்து வருகிறது. இவ்வாறு இளைஞர்கள் குடிப்பழக்கத்துக்கு ஆளாவதற்கு அவர்கள் மத்தியில் உள்ள மனவிரக்தி மற்றும் காதல் தோல்வி என்பனவே காரணம் என்று சிலர் கூறுகின்றனர்.

இவ்வாறான காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை.

### மூட நம்பிக்கை

பிரசவத்தின் பின்னர் சில தினங்களுக்கு பெண்கள் மது அருந்தவேண்டும் என்ற தவறான மூடநம்பிக்கை எம்மவர்கள் மத்தியில் வளர்ந்து வருகிறது.

இதுவரை காலமும் எந்த மருத்துவரும் பிரசவத்தின் போது பெண்கள் மது அருந்த வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்ததில்லை.

இன்று எமது சமூகத்தில் மரண வீடுகளில் மது அருந்துவது வழக்கமாகி விட்டது. மரண வீடுகளில் கவலையைப் போக்குவதற்கு மது அருந்துவதாகக் கூறிக்கொள்பவர்கள் திருமண வீடுகளிலும் குடிக்கின்றார்கள். அப்போது சந்தோஷ மிகுதியால் குடிப்பதாகக் கூறுகின்றனர்

ஈரல் மற்றும் உடலின் முக்கிய உறுப்புக்களை செயலிழக்கச் செய்யும் சக்திவாய்ந்த இந்த மதுப்பாவனையை ஒழிப்பதற்கு கிராம மட்டத்தில் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து சட்டவிரோத சாராய உற்பத்தி மற்றும் விற்பனையை முதற்கட்டமாக தடுத்து நிறுத்தவேண்டும்.

### பெண்களும் குடிக்கு அடிமையாகும் நிலை

வெளிநாடுகளைப் போன்று குடாநாட்டிலும் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகும் பெண்களின் தொகை அதிகரித்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. இது மிகவும் மனவேதனையைத் தருகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியை நீண்டகால குடிப்பழக்கம் உடையவராக இருந்தமை அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

குடிப்பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டால் பின்னர் அதிலிருந்து விடுபட முடியாமல் இருப்பதாகச் சிலர் கூறுகின்றனர்.

இவ்வாறு மது மற்றும் சிகரெட் பாவனைக்கு உட்பட்டு அதிலிருந்து விடுபட வேண்டும் என்று நினைத்தும் விடுபட முடியாதவர்கள் எமது 'சாந்திகம்' நிலையத்துடன் தொடர்புகொண்டு ஆலோசனை பெறமுடியும்.

இந்த மதுப் பழக்கத்தில் இருந்து எப்படி விடுபடுவது என்ற ஆலோசனை வழங்கப்படுகிறது என்று தெரிவித்தார். (க-4)

## கப்பலில் பசளைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஒக். 12

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி 'கோமாரி' கப்பலில் 200 மெற்றிக் தொன் இரசாயனப் பசளைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றில் 100 மெற்றிக் தொன் ரி.டி.எம், 50 மெற்றிக் தொன் அமோனியம் சல்பேற் மற்றும் 50 மெற்றிக் தொன்வி - வண் என்பன அடங்குகின்றன.

இதேவேளை தமது பயிர்ச் செய்கைக்கு யூரியா தேவைப்படும் விவசாயிகள் தமது பகுதி கமநல கேந்திர நிலையங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கே. சுந்தரேசன் அறிவித்துள்ளார்.

'சஜிந்த' கப்பலில் எடுத்து வரப்படவுள்ள 500 மெற்றிக் தொன் யூரியா இங்கு வந்து சேர்ந்ததும் அவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். [க-10-ரி]

### கோப்பாய்ப் பகுதியில் அதிகாலை வேளை

## விழிப்புக் குழுவினரிடம் சிக்கிய கசிப்பு வியாபாரிகள் மூவர்!

கோப்பாய், ஒக். 12

கோப்பாய் மத்திப் பகுதியில் பெருமளவு கசிப்பைக் கடத்திய வியாபாரிகள் மூவர் விழிப்புக் குழுவினரிடம் வகையாகச் சிக்கிக் கொண்டனர்.

நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் உரும்பிராய்ப் பகுதியில் இருந்து திருநெல்வேலிக்கு கடத்தப்பட்ட 120 போத்தல் கசிப்பே இராசா வீதிப் பகுதியில் நின்ற விழிப்புக்குழுவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

கசிப்புக் கடத்தலில் ஈடுபட்ட மூன்று நபர்களும் கசிப்பு 'கான்கள்' மற்றும் கசிப்பு போத்தல்களுடன் இராசவீதிச் சந்திப் பகுதியில் பொதுமக்கள் பார்வைக்கு நிறுத்தப்பட்டனர். இவர்கள் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் கிராம அலுவலர்களான கு. ஜோசப் ரெட்ணராஜா, சி. தயாபரன் ஆகியோர் மூலம் கையளிக்கப்பட்டனர்.

இந்த நபர்கள் விழிப்புக் குழுவினருக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்டதாகவும் கூறப்படுகிறது. (க-72-86)

## மானிப்பாய் மருத்துவ முகாமில் 303 பேருக்குப் பரிசோதனை

### வைத்திய நிபுணர் 7 பேர் பங்குபற்றினர்

வலிகாமம் தெற்கு, ஒக். 12

லயன்ஸ் கழகங்களின் உலகளாவிய சேவைத் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினர் தென் இந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்துடன் இணைந்து லயன் டாக்டர் நவமலர் கனகரட்ணம் தலைமையில் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடந்த ஞாயிறு நடத்திய விசேட இலவச மருத்துவமுகாமில் 303 பேர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தென் இந்தியத் திருச்சபை யாழ். அத்தியட்சகர் வண. பிதா ஜெபநேசன் அடிகளார், இணுவில் மக்லியட் தென்இந்தியத் திருச்சபை மருத்துவப் பிரிவு நிர்வாக அதிகாரி ஏ. இராசநாயகம், மகப்பேற்று சிரேஷ்ட வைத்தியர் திருமதி சந்திரா அம்பலவாணர் உட்பட லயன்ஸ் கழக அங்கத்தினர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

ஏழு விசேட வைத்திய நிபுணர்கள் ஒரே கூரையில் அமர்ந்து பரிசோதனை செய்வது யாழ்ப்பாணத்தில் இதுவே முதல் தடவையாகும் என முகாம் அமைப்பாளர் லயன் எஸ். எஸ். தங்கராசா குறிப்பிட்டார்.

நோயாளர்களுக்குத் தேவையான மருந்து வகைகளைத் தென்இந்திய திருச்சபையினர் இலவசமாக வழங்கினர். (க-152)

## கண்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

சாகித்திய விழாவை முன்னிட்டு சங்கானைப் பிரதேச செயலகத்தில் இன்று முதல் இரண்டு தினங்களுக்கு நடத்தப்படவிருந்த பாரம்பரிய கலை, கைப்பணிக் கண்காட்சி தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்காட்சி நடைபெறும் புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## ஆசிரியர் சங்க கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளினதும் செயலாளர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நல்லூரில் உள்ள சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு கிளைச் செயலாளர்கள் அனைவரையும் வருகை தருமாறு மாவட்டச் செயலாளர் க. குமாரசாமி கேட்டுள்ளார். (க-7)

## மீண்டும் தலைதூக்கும் பாதீனியம்!

கோப்பாய், ஒக். 12

கோப்பாய்ப் பிரதேசங்களான உரும்பிராய், நீர்வேலி, புத்தூர்ப் பகுதிகளில் பாதினியம் களைகள் மீண்டும் முளைத்து வருகின்றன. அண்மைய மழையைத் தொடர்ந்தே பாதினியம் முளைத்து அடர்த்தியாக வளர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப் பகுதிகளில் கடந்த சித்திரை, வைகாசி மாதங்களில் பாதீனியம் பல்வேறு பொது அமைப்புகளால் பிடுங்கி அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இந்தக் களையை முற்றாக அழித்து ஒழிக்கக் கூடிய முறையைச் செயற்படுத்த வேண்டுமென இப் பகுதி விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-72)

## சோளம் பயிரிட விரும்புவோர் உடன் நடுகையை ஆரம்பியுங்கள்!

### விவசாயப் போதனாசிரியர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

எமது பிரதேசத்தில் காலபோகத்தில் மானாவாரியாக சோளம் பயிரிடமுடியும். மனித உணவாகவும், கால்நடை உணவுக் கலவையின் மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படும் சோளம் நடுகைக்காலம் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களாகும். எனவே இம்மாதம் முடிவடைவதற்குள் யாழ்ப்பாணக்குடாநாட்டில் சோளச் செய்கையில் ஈடுபட விரும்புபவர்கள் இம்மாதத்துக்குள் நடுகையை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு உடுவில் விவசாய போதனாசிரியர் திருமதி ஜெ. சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தின் உதவியுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் சோளப்பயிர்ச் செய்கை மேற்கொள்வது ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

இதனையொட்டி கமநல சேந்திர நிலையங்கள், விவசாய போதனாசிரியர்கள் மூலமாக சோளச் செய்கையில் ஈடுபடுவோருக்குத்தேவையான விதைகள் மற்றும் விவசாய ஆலோசனைகள் ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன.

சோளம் இதுவரை காலமும் யாழ். குடாநாட்டில் பெரிய அளவில் பயிரிடப்படவில்லை. இன்று உள்ளூரிலேயே மூலப்பொருள்களைப் பெற்று கால் நடைகளின் செறிவுத்தின் தயாரிக்க வேண்டிய நிலையில் உள்ளோம. இந்நிலையில் சோளப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பயறு, கௌபீ, நிலக்கடலை என்பன பிறமாவட்டங்களில் இருந்தே கொண்டு வரப்படுகின்றன இவற்றின் விலையும் அதிகரித்தமையால் இவற்றைப் பாவிப்பதும் குறைந்து வருகிறது. விவசாயிகள் செய்கை பண்ணும் காணியில் ஒருபகுதியிலும், தரிசாக விடப்பட்டுள்ள மேட்டு நிலங்களிலும் அவரை இன பயிர்ச் செய்கையையும் மேற்கொள்ளுங்கள் என விவசாயப் போதனாசிரியர் கேட்டுள்ளார். (க-152)

## நூலகவியல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஒக்.11

இலங்கை நூலகவியற்சங்கத்தினால் நூலகவியலாளர் பயிற்சிநெறி விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சிநெறியில் இணைய விரும்புவோர் தமது விவரங்களை யாழ். இந்துக் கல்லூரி நூலகத்தில் பதிவு செய்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஜ)

## மின் இணைப்பு ஆரம்பப் பணி

நீர்வேலி, ஒக். 12

நீர்வேலி வடக்கு, சிறுப்பிட்டி தெற்கு ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெறுகின்றன.

இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி பொதுமக்கள் வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர், உப தலைவர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியதை அடுத்தே இதற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன. [க - 10]

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோப்பாய் பிரதேசத்தில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட திருட்டு அதிகரிப்பைத் தடுக்கும் முகமாகவும், திருடர் குழுவைப் பிடிக்கவும் அதற்கு ஏற்ற வழிமுறைகளை மேற் கொள்ள உதவிய

மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்

கோப்பாய் பிரதேச சபைத் தலைவர்

**பூ.குணசிங்கம்,**

உடனிருந்து உதவிபுரிந்த கோப்பாய் பிரதேச அமைப்பாளர்

U.L.A. **ரவி** மற்றும்

கோப்பாய்ப் பிரிவு கிராம உத்தியோகத்தர்களான

**திரு.கு.ஜோசப் ரட்ணராஜா, சி.தயாபரன், க.முத்துக்குமாரசாமி** ஆகியோரையும்

நீர்வேலி, இருபாலை சிவில் காரியாலயங்கள், கோப்பாய் பொலீஸ் நிலையம் ஆகியவற்றின் பொறுப்பாளர்களையும் -

தமது நேரம், வேலைகளை ஒதுக்கிவைத்து, நேரடியாகச் செயற்பட்ட மாரியம்மன் ஐக்கிய சனசமூக நிலையம், கண்ணகி அம்மன் சனசமூக நிலையம், நாவலடி சனசமூக நிலையம், வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையம், காளியம்பாள் சனசமூக நிலையம், வள்ளியம்மன் சனசமூக நிலையம், யோகபுரம் சனசமூக நிலையம் ஆகியவற்றின் உறுப் பினர்களையும் -

கோப்பாய்ப் பிரதேசத்தில் நடந்த திருட்டுக்கள் மற்றும் கசிப்பு விற்பனை போன்ற சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்தியமைக்காக மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் மத்தி,
நாவலடி மக்கள்.

(93337)



# மனம் மகிழ்கின்றோம்



எமது கழகத்தைச் சேர்ந்த

செல்வி

**ஜெயராணி நாகலிங்கம்**

**அவர்கள் 06-10-2001 அன்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா வில் முதுதத்துவமாணி (M.Phil.) பட்டத் தினைப் பெற்றமையையிட்டு மனமகிழ்வ துடன் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.**

ஜுப்பிற்றர் விளையாட்டுக் கழகம்
*வல்லை வீதி, சங்கானை.*

(93336)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.சிவராமலிங்கம் சிவதரன்**

**B.B.A. (Hons)**

யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா வில் தொழில் நிர்வாகமாணிப்பட்டம் பெற்ற எமது சக ஊழியர் திரு.சிவராமலிங்கம் சிவதரன் (யாழ்ப்பாணம்) அவர்களை நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்,
*காங்கேசன்துறை.* (93343) பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கூட்டுத்தாபன ஊழியரும்
சிறந்த விளையாட்டு வீரருமான

**திரு.மகேந்திரன் நிர்மலேஸ்வரன்**

**(காந்தன் - நாவலி)**

அவர்கள் ஆனைக்கோட்டை மகாஜன சன சமூக நிலையம் நடத்திய மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், இவ்வாண்டு யாழ்.மாவட்டத்தில் பங்குபற்றிய 13 வெவ்வேறு போட்டிகளிலும் 8 போட்டிகளில் முதலாம் இடத்தையும், 3 போட்டிகளில் இரண் டாம் இடத்தையும் பெற்றுச் சாதனை புரிந்தமைக்கு எமது வாழ்த்துக்களைக் கூறி, பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*காங்கேசன்துறை.* நண்பர்கள்,
(93342) பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.



# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## யாழ்ப்பாணம்

**முறைசாராக் கல்விப் பிரிவின் கணனி பயிற்சிநெறி - 2001**

**யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் எமது கல்லூரி பழைய மாணவர்களுக்கான கணனிப் பயிற்சிநெறி இன்று முதல் நடைபெறவுள்ளது.**

**மேற்படி பயிற்சிநெறிக்காக விண்ணப்பித்த 1999, 2000 உயர்தரப் பிரிவு மாணவர்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு பாடசாலைக்குச் சமுகந்தரவும்.**

(C/18650) - அதிபர்.



# துயர்பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக அலுவலகப் பணியாளர்
திரு.பொ.கதிரமலை அவர்களின்
அன்புத் தந்தையார்

**அமரர் கார்த்தி பொன்னர்**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
(93344) பிரதேச செயலகம் (வலி.கிழக்கு),கோப்பாய்.


## சோடா என நினைத்து பெற்றோலைக் குடித்த சிறுவன் ஆஸ்பத்திரியில்!

தென்மராட்சி,ஒக்.12

சோடா என நினைத்துப் பெற் றோலை அருந்திய சிறுவன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளான்.

கடந்த 9ஆம் திகதி மந்திகைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத் தில் இதே இடத்தைச் சேர்ந்த தியா னந்தராசா சிரஞ்சீவி (வயது 13) என்னும் சிறுவனே பாதிக்கப்பட் டுள்ளான்.

சோடாப் போத்தலில் பெற்றோல் இருந்ததால், சிறுவன் அதைத் தவ றாக எண்ணிக் குடித்ததாகத் தெரி விக்கப்பட்டது. (க-117-ரி)

## ஆலயத் திருப்பணிகள் பொதுமக்களின் உதவியுடன் பூர்த்தி

கோப்பாய்,ஒக்.12

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயிலில் பல இலட்சம் பெறுமதியுள்ள திருப்பணி வேலை கள் நிறைவேறியுள்ளன.

புதிய கதவுகள் அமைத்தல், தேர்ப்படி அமைத்தல், தேர் கொட்ட கைக்கான புதிய கதவுகள் அமைத் தல் மற்றும் கண்ணகை அம்மன் வரலாற்றைக் கூறும் சுவர் ஓவியங்கள் வரைதல் ஆகிய திருப்பணிகளே பொதுமக்களின் நிதி உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (க-72)

## இடம்பெயர்சேவைக்கு சமுகம் தந்த 350 பேர்!

கோண்டாவில்,ஒக்.12

நல்லூர் பிரதேச செயலகத்தி னால் நேற்று நடத்தப்பட்ட இடம் பெயர்சேவையில் சுமார் முந்நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட மக்கள் தமது பிரச்சினைகள் சம்பந்தமாக உரிய அலுவலர்களைச் சந்தித்தனர்.

பிரதேச செயலக இடம்பெயர் சேவையில் பல திணைக்களங்களைச சேர்ந்த தலைவர்கள் கலந்துகொண்ட போதிலும், யாழ்.மாநகர சபை ஊழி யர்கள் கலந்துகொள்ளாமையால் சில விடயங்களுக்கான தீர்வு காண முடியாது போய்விட்டது.

அதிக எண்ணிக்கையானவர்கள் வீடுகளுக்கான இழப்பீடு சம்பந்த மாகக் கோரிக்கைகளைச் சமர்ப்பித் திருந்தனர்.

மற்றும் மின்சாரம் சமூகசேவைப் பகுதி ஆகியவற்றுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையான பொதுமக்கள் பிரச்சினைகளை முன்வைத்திருந்தனர். (க-86)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.12

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி உயர்தர மாணவர் மன்றம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்த விருந்த உயர்தர மாணவர் ஒன்று கூடல் தவிர்க்க முடியாத காரணத் தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என உயர்தர மாணவர் மன்றம் அறிவித் துள்ளது. (க-ரி)

## செயற்பாடு மதிப்பிடும் பணி ஆரம்பம்

யாழ்பாணம்,ஒக்.12

ஜேர்மனி தொழில்நுட்ப நிறுவனத் தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச் சினால் யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயப் பாடசாலைகளிலும் ஆரம்ப வகுப்புக்களின் செயற்பாடு களை மதிப்பிடும் பணி நேற்று முன் தினம் புதன்கிழமை முதல் ஆரம்ப மாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக் கிழமை வரையும் நடைபெறவுள்ள இப் பணியில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறு வனத்தின் கண்காணிப்பும் மதிப்படும் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளும் வல யங் களின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பா ளர்களும் இணைந்து செயற்பட்டு வரு கின்றனர். (ம-10)


**நாளை ஆரம்பம்!**

**A/L 2002 PAPER CLASS**

கணிதப்பிரிவு

**C.MA.**- G.ஐங்கரன் B.Sc.
சனி, ஞாயிறு - 6.30 - 8.30 a.m.

**PHY.** - K.ரமேஸ் B.Sc.
சனி, ஞாயிறு - 4 - 5 p.m.

**CHE.** - K.பவான் B.Sc.
சனி, ஞாயிறு - 3 - 4 p.m.

**THIHAL**

(சி18652) இணுவில்.


# வாசகர் திருமுகம்

## 'கிளினிக்' நோயாளரின் குறை நீங்குமா?

திறந்தவெளிச் சிறையில் வாழ்ந்துகொண்டிருக்கும் குடாநாட்டு மக்க ளுககு ஓரளவு நிறைவான சேவை செய்துகொண்டிருப்பது யாழ். போதனா வைத்தியசாலை. இங்கு பல சிரமங்களுக்கு மத்தியிலும் சேவையாற்றும் வைத்தியர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் யாழ். குடாநாட்டு மக்கள் என்றும் நன்றி உடையவர்களாவர். இருப்பினும் வைத்தியசாலையின் ஒருபகுதியாக விளங்கும் 'கிளினிக்' பகுதியையும், தினசரி அங்கு நோயாளர்படும் வேதனையையும் கண்டும் காணாமல் இருக்கமுடியாது.

நீங்கள் காலை 9 மணிக்கு மேற்படி 'கிளினிக்' பக்கம் செல்வீர்களா னால், ஏதாவது தேர்த்திருவிழாவா என்று ஆச்சரியப்படுவீர்கள். இந்தக் 'கிளினிக்' இரண்டு வைத்திய நிபுணர்களின் மேற்பார்வையில் தினசரி நடைபெறுகிறது. இங்குவரும் நோயாளர் சலரோகம், இரத்த அழுத்தம் போன்ற ஆபத்தான நோய்களுக்குப் பரிகாரம்தேடி வருகின்றனர்.

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் இருந்து அதிகாலை 4 மணிக்கே நோயாளர், இராணுவச் சோதனைச் சாவடிகளைத் தாண்டி, நேரத்தக்கு வைத்தியசாலைக்கு வந்தாலும், 'பிரதான கேற்' திறக்கப்படாததால், வாசலிலேயே தவங்கிடந்து, வைத்தியசாலை 'கேற்' திறக்கப்படமாட் டாதா என்ற ஏக்கத்துடன் காத்திருப்பர்.

காலை 5.30 மணிக்கு 'கேற்' திறக்கப்பட்டதும் 'கிளினிக்' பகுதியில் உள்ள வாங்குகளில் அமைதியாக இருப்பர். நேரம் செல்லச் செல்ல கூட்டம் அதிகரிக்கும். காலை 9 மணிக்கு வாங்குகள் நிரம்பி வழிந்து, 'கியூ' வரிசை 'அனுமன் வாலாக' நீண்டு செல்லும். இந்த வரிசையில் தினசரி பல நோயாளர் மூர்ச்சித்து விழுவதும் சர்வசாதாரணம்.

'கிளினிக்' ஊழியர் வந்து, கொப்பிகளைச் சரி செய்து, வைத்தியர் களின் அறைகளுக்கு நோயாளரை அனுப்புவர். மிகக் குறைந்த வைத்தி யர்கள் மிகப் பெரிய கூட்டத்தைச் சமாளிக்க முடியாத நிலை. ஒருவாறு வைத்தியப் பரிசோதனை முடிந்து மருந்தகம் பக்கம் சென்றால், அங்கு மிக நீண்ட 'கியூ'. அங்கு ஒரேயொரு ஊழியர் மட்டும் நின்று மிக மெதுவாக மருந்து கொடுப்பார்.

காலை 10.30 மணிக்குள் மருந்தைப் பெற்றுச் செல்பவர் அதிர்ஷ்ட சாலிதான். காலை 4 மணிக்கு 'கிளினிக்' வருபவர் பிற்பகல் 1.30மணிக்கு மருந்து எடுக்க முடியாத நிலை. தினசரி 500இற்கு மேற்பட்ட நோயாளர் கள் இந்த அவஸ்தையைச் சந்திக்கத்தான் வேண்டுமா? இருக்கும் வளங்களைக் கொண்டு, நிறைவான சேவையாற்ற நோயாளிகள் சார்பாகத் தான் கீழ்வரும் ஆலோசனைகளைத் தெரிவிக்கிறேன்.

☆ காலையில் 'வார்ட்' கடமைகளில் பணிபுரியும் வைத்தியர்களின் சேவையை ஒரு சில மணித்தியாலத்திற்கு மட்டும் 'கிளினிக்' பகுதிக்கு எடுத்தல்.

☆ மருந்தகத்தில் பணிபுரிய மேலதிக மருந்தாளர்களை ஒழுங்கு செய்தல் -

☆ ஊழியர்களின் உறவினர், நண்பர்கள் போன்றோருக்கு சலுகை காட்டாமல், சகல நோயாளர்களையும் சமமாக நடத்துதல் -

☆ சில மாதங்களின் முன் இந்தக் 'கிளினிக்' பகுதியில் கடமைபுரிந்த அனுபவம் வாய்ந்த இரண்டு ஊழியர், வார்ட் கடமைக்கு மாற்றப்பட்ட அங்கு கடமை புரிகின்றனர். அந்த அனுபவம் வாய்ந்த ஊழியர் இருவரையும் மீண்டும் 'கிளினிக்' பகுதிக்கு மாற்றுதல் -

இந்த ஆலோசனைகள் எமது வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கு சமர்ப்பணம்.

*நல்லூர்.* **கே.கே.விநாயகம்.**

## மக்களைக் கொள்ளையடிக்கும் ஆங்கில மருந்து வர்த்தகர்கள்!

யாழ். குடாநாட்டில் தற்போது ஆங்கில மருந்துப் பொருள்களுக்கு பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் கொழும்பிலிருந்து இங்கு மருந்து வகைகளைக் கொண்டுவரும் வர்த்தகர்கள் மொத்தம் 4 பேர்தான். ஆனால் மருந்த கங்கள் குடாநாட்டில் 70இற்கும் அதிகமாக உள்ளன. இதேவேளை மருந்தாளர்களுக்கும் இங்கு பற்றாக்குறை உண்டு.

கொழும்பிலிருந்து மருந்துவகைகளைக் கொண்டுவரும் வணிகர்கள் தமக்கு 30 வீதம் இலாபம் வைத்து மருந்து வகைகளைத் தனியாா பாமசிகளுக்கு விநியோகம் செய்கிறார்கள். (Retail Pharmacy) மருந்தகங் கள் இவற்றைக் கொள்வனவு செய்து 12 வீதம் தொடக்கம் 20 வீதம் வரை இலாபம் வைத்து நுகர்வோருக்கு விற்பனை செய்கிறார்கள்.

தற்போது யாழ். குடாநாட்டில் மருந்து வகைகள் தட்டுப்பாடு ஏற்பட்டதைப் பயன்படுத்தி ஒருமொத்த வியாபாரி (Dexowa eye drops) கண்ணுக்கு விடும் மருந்து உட்பட சகல மருந்துகளையும் 90 வீதம் இலாபம் வைத்து விற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஆகவே குடாநாட்டு மக்களைக் காப்பாற்ற அரச அதிகாரிகளும் கவனம் செலுத்துவது இல்லை. கொழும்பில் (Dexowa eye drops) 45 ரூபா. ஆனால் இங்கு மொத்த வியாபாரிகள் 85 ரூபாவுக்கு அதனை விநியோகம் செய்கிறார்கள். மருந்தகங்களில் இம்மருந்து 95 ரூபா முதல் 100 ரூபா வரை விற்கப்படுகிறது.

மக்களைச் சுரண்டும் இத்தகைய மொத்த வியாபாரிகளைக் கண்டிப் பதற்கும்,அறிக்கை விடுவதற்கும் குடாநாட்டில் மருந்து வணிகர் சங்கம் இல்லை. முன்பு 1994, 1995இல் இயங்கிய மருந்து வணிகர் சங்கம் இன்று செயலிழந்துவிட்டது.

புதிய மருந்துச் சங்கத்தை அமைத்து, அதன் மூலம் யாழ். அரச அதிபருடன் கலந்தாலோசித்து சுகாதாரத் திணைக்களத்தின் உதவியு டன் மொத்த வியாபாரிகளின் கொள்ளைலாபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். முடியாவிடின் அரச உயரதிகாரிகள் ஓய்வு எடுத்துக் கொள் ளட்டும் அல்லது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மருந்து வகை களைக் கொழும்பிலிருந்து கொண்டுவந்து விநியோகம் செய்ய வேண்டும். அத்துடன் கொழும்பிலிருந்து மருந்து வகைகளை இங்கு கொண்டு வருவதற்கும் 15வீதம் இலாபத்துடன் அவற்றை இங்கு விநியோகம் செய்வதற்கும் புதிய தனியார் வியாபாரிகள் முன் வருவார்களா?

இதேவேளை குடாநாட்டு மருந்தகங்களில் விற்பனை செய்யப்படும் மருந்தின் விலையை அரச அதிபரும், யாழ். சுகாதாரப்பிரிவினரும் அடிக்கடி பரிசீலனை செய்ய வேண்டுமெனப் பொதுமக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

*யாழ்ப்பாணம்.* **கே.சீலன்.**

## ஏன் இந்தப் பாராமுகம்?

கலாசாரச் சீரழிவுகளைக் கைவிடுமாறு கோரும் விடுதலைப் புலி களின் அறிக்கையைத் தங்கள் பத்திரிகையில் வாசித்தேன். கலாசாரச் சீரழிவு என்று ஆபாசப் படங்களை மட்டும் குறிப்பிட்டது ஆச்சரியமாக இருக்கிறது.

கொலை, கசிப்பு, கத்திவெட்டு, கொள்ளை எனவும் இளைஞர்கள் விடுகாலிகளாக வீதிகளில் அலைவதும் கலாசாரச் சீரழிவுகள் அல்லவா? இவற்றுக்கு மாத்திரம் ஏன் இந்தப் பாராமுகம்?

**பரம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோண் பொஸ்கோ பாடசாலை மாணவன்

**செல்வன்**

**பொன்னம்பலம் முருகேந்திரா** அவர்கள்

(160 புள்ளிகள்)

2001 ஆம் ஆண்டு, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று சித்தியடைந்தமையையிட்டு முருகேந்திராவைப் பாராட்டி உளமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியரல்லாத ஆளணியினர்,
யா/வேம்படி மகளிர் கல்லூரி.

(C/18656)

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## முத்தமிழ் விழா - 2001

*காலம்* : இன்று (12.10.2001) வெள்ளிக்கிழமை காலை 9 மணி
*தலைவர்* : திரு.ந.திருவாசகன்

நிகழ்ச்சி நிரல்

- மங்களவிளக்கேற்றல், இறைவணக்கம்
- வரவேற்புரை - செல்வி இ.டயாழினி
- தலைமையுரை -
- வாழ்த்துரை - திருமதி கௌரி சுரேசன் (மன்றக்காப்பாளர்)
  திரு.பா.தனபாலன்
  (உப பீடாதிபதி, கல்வியும் தர மேம்பாடும்)
- பிரதம விருந்தினர் உரை - பேராசிரியர் அ.சண்முகதாஸ்
  (பீடாதிபதி)
  (உயர்பட்டப்படிப்புக்கள் பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்)
- சிறப்பு விருந்தினர் உரை - திரு.க.மணிபல்லவராஜன் (தலைவர்)
  (பிரதேச சபை, நல்லூர்)
  திரு.மு.பரஞ்சோதி (அதிபர்)
  (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
- கலை நிகழ்ச்சிகள், பட்டி மண்டபம்
- உரை - "சமூக நீரோட்டத்தில் தமிழர் கலாசாரம்" - செல்வி ப.ரேணுகா
- சிறப்புக் கருத்துரை - 'தமிழர் பண்பியலில் முத்தமிழ்' -
  கலாநிதி ப.புஷ்பரட்ணம்
  (சிரேஷ்ட விரிவுரையாளர்)
  (வரலாற்றுத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)
- ஆற்றுகை நிகழ்வுகள் - நாட்டியம், நாடகம்
- சான்றிதழ் வழங்கல்
- நன்றியுரை - திரு.து.கிருபாகரன் (மன்றச் செயலாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தமிழ் மன்றம்*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

*விளம்பர அன்பளிப்பு:*
மிலேனியம் ஓடியோ வீடியோ சென்ரர்
238, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் - T.P. - 3646.
(93358)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மின்னொளி கல்விக்கழகம்

கைதடி

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை - 2001 இல் எமது கல்வி நிறுவனத்தில் கல்வி பயின்று சித்தியெய்திய

பாலசுப்பிரமணியம் துஷ்யந்தினி - 131
அப்புலிங்கம் றெஜினியா - 131

ஆகியோருடன் வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற 13 மாணவச் செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(93333)

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எழுதுநர்

**செல்வி தியாகராசா தர்சினி** அவர்களது பாசமிகு அப்பம்மா

**திருமதி நடராசா இராசலட்சுமி அம்மா**

(கரம்பைக்குறிச்சி, வரணி)

அவர்கள் 09.10.2001இல் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,*
*பளை. (நெல்லியடி)*

*தலைவர். உறுப்பினர்கள்.*
*செயலாளர். உத்தியோகத்தர்கள்.*
*நலன்புரிச் சங்கம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.*
(93346)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி

**மில்றெட் ரெட்ணராணி அலெக்சாண்டர்**

உதிர்வு: 10.10.2001

எமது சக ஊழியன் திரு.J.W.A.அலெக்சாண்டர் அவர்களின் பாசமிகு தாயாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*தபாலகம்,*
*யாழ்ப்பாணம்.*

யாழ்.பிரதம தபாலக
ஊழிய நண்பர்கள்.
(93347)

## கலாசார விழா

வேலணை,ஒக்.12

தீவுப்பகுதி தெற்கு பிரதேச கலாசார விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும் கௌரவ விருந்தினராக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக தீவகம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், தீவக கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தரும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளருமான செ.பெர்ணாண்டஸ் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

இந்த நிகழ்வில், பண்ணிசை, நடனம், காத்தவராயன் கூத்து, கரகாட்டம், நாடகம், வில்லுப்பாட்டு, தனிஇசை, இசை நாடகம், கவியரங்கம், விசேட கூத்து, அபிநயப்பாடல், சமூகநாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அத்துடன் சிறப்பு சமூக சேவையாளர்களான வேலணை விஷகடி வைத்தியர் திருமதி அனுசம்மா இளையதம்பி, நயினாதீவு ஓவியர் முத்தையா பரமேஸ்வரன், வேலணை சமூக சேவகி திருமதி பத்மாவதி திருஞானச்செல்வம், சரவணை சங்கீத வித்துவான் பேரம்பலம் சந்திரசேகரம், நயினாதீவு சுதேச வைத்தியர் கே.ரி.சோமசேகரம் ஆகியோர் இந்த நிகழ்வில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-167)

## கணித, விஞ்ஞான வினாவிடை போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.12

தீவக கல்வி வலயம் நடத்தும், கணித, விஞ்ஞான வினாவிடைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 12 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

வலய மட்டத்திற்கு விண்ணப்பித்த மாணவர்கள், தங்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கமைய உரிய நிலையங்களில் பங்குபற்றுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ஐ-3)

## இலக்கியத்துக்கான நோபல் பரிசு இந்தியருக்கு!

புதுடில்லி,ஒக்.12

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டிஷ் எழுத்தாளர் நெய்பால் இந்த ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெறுகிறார்.

மேற்கிந்தியாவில் பிறந்து பிரிட்டனில் வாழும் நெய்பால் சித்திரச் சம்பவங்களை மக்களுக்குப் புரியும் வகையில் எளிமையாக எழுதிவந்தார்.

இலக்கியத்துக்கான புக்கர் பரிசையும் இவர் பெற்றவராவார். (ஐ-ஒ)

## துவிச்சக்கரவண்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது

லுமாலா - T 2050871 இலக்கத் துவிச்சக்கரவண்டியொன்று கொக்குவில், பூநாறிமரத்தடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் உரிய ஆவணத்துடன்,

S. விசுவநாதர்,
ஆராய்ச்சியார் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

T.P. 3249 தொடர்பு கொள்ளவும்.
(93352)


## ராஜா யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன்
நடித்த

**ப்ரியமானவளே**

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி. ஞாயிறு 10.30, 2.5 (புதிய நேரம்)
(C/18457)

## நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார், தேவயானி, விக்ரம்
நடித்த

**விண்ணுக்கும் மண்ணுக்கும்**

(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(93303)


## நன்றியோடு வாழ்த்துகின்றோம்

**மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை**

2001 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

| | |
|---|---|
| *இ. அபிராமி* | *138 புள்ளிகள்* |
| *வி. றெபேக்கா* | *135 புள்ளிகள்* |
| *யே. பிரியதர்சிகா* | *128 புள்ளிகள்* |
| *இ. செந்தூரன்* | *126 புள்ளிகள்* |
| *இ. ஜெசிக்கா* | *119 புள்ளிகள்* |
| *யோ. ஸ்ரெபானி* | *118 புள்ளிகள்* |

ஆகிய மாணவர்களை வாழ்த்துவதுடன் இவர்களை உருவாக்கிய பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

- பெற்றோர்.

(93353)

## எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

துர்க்கா பத்தி போன்று தரங்குறைந்த, போலியான பத்திகள் குறைந்த விலையில் விற்கப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே வாடிக்கையாளர்கள் வாங்கும்போது அசல் துர்க்கா பத்திதானா எனப்பார்த்து வாங்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அண்ணா தொழிலகம்,
இணுவில் தெற்கு.

(C/18651)

## 90ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்: 11 - 05 - 1959



விண்ணில்: 14 - 07 - 2001

**அமரர் கந்தையா ஸ்ரீவள்ளிநாயகி**

(வள்ளி)

மன்றத்தின் வளர்ச்சிக்கு உழைத்திருந்தீர்
மங்கையர்வாழ்வு நலம்பெறத் திட்டங்கள் வகுத்துத்தந்தீர்
மங்காத புகழ்பெற்று மகிழ்வாக வாழ்ந்திருந்தீர்
மன்றமது மண்ணில் உள்ளவரை உமைமறவோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

கௌரி மகளிர் சமூக அபிவிருத்தி சே.க. அங்கத்தவர்கள்,
கௌரி மகளிர் சி.க.கூ.ச. அங்கத்தவர்கள்.

(93348)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ருக்மணி வைத்திலிங்கம்

நல்லூர் கையிலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்மணி வைத்திலிங்கம் நேற்று (11.10.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் செல்லமுத்து தம்பதிகளின் அருமை மகளும், வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், சத்தியகுமரன் (ஜேர்மனி), வைகுந்தகுமரன் (V.S.P.), வசந்தகுமரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உதயகுமரன் (ரமேஷ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஷ்பராணி, ராஜசுலோசனா, சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிரமேஷ்குமார, வைஷ்ணவகுமரன், பிரணவகுமரன், கோகுல்ரிஷிக்குமரன், மகேஸ்குமரன், திருக்குமரன், வைஷ்ணவி, தாட்ஷாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19,கையிலாசபிள்ளையார் கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

தகவல்:
வைகுந்தகுமரன்
(ராதா - மகன்)

(93356)

### கிருஷ்ணபிள்ளை அம்பலவாணர்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை அம்பலவாணர் (09.10.2001) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2001) வெள்ளிக்கிழமை அராலி தெற்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் பூநாவடை இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி தெற்கு,வட்டுக்கோட்டை.*

தகவல்:
மா.சோமசேகரம் (மருமகன்)

(93351)

### திருமதி நமசிவாயம் மனோன்மணி

(நயினாதீவு)

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் வேலணை வங்களாவடியில் வசித்தவருமான திருமதி நமசிவாயம் மனோன்மணி நேற்று (11.10.2001) வியாழக்கிழமை வேலணையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு நமசிவாயம் (நகைக்கடைக் கணக்காளர்) அவர்களின் அன்பு மனைவியும், லயன் கதிர்வேலு J.P.(அமைப்பாளர், இலங்கைக்காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), கருணாகரகுருமூர்த்தி (J.P.U.M. தலைவர், வேலணைப்பிரதேச சபை), ஆகியோரின் அன்புத் தாயாரும், இரதி, சுதர்சினி, ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்திகா, கௌதமி, டிலோனி, தயானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (13.10.2001) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை வங்களாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"நயினைக் கதிர்"*
*வங்களாவடி, வேலணை.*

தகவல்
லயன் கதிர்வேலு J.P(மகன்)

(93350)

## அமெரிக்க தாக்குதல் தீவிரமடைகிறது

# கடந்த 24 மணித்தியாலங்களில் ஆப்கானிஸ்தானில் 140பேர் பலி!

## ஒரு கிராமத்தில் மட்டும் 50 சடலங்கள்

லண்டன்,ஒக்.12

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் சுமார் 140 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

4ஆவது நாளாக நேற்றுத் தொடர்ந்து இடம்பெற்ற அமெரிக்க விமான மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் முன்பை விட மிகக்கடுமையாக இருந்ததாகக் கூறப்பட்டது.

நேற்றைய தாக்குதல்களின் போது பொதுமக்களின் குடியிருப்புகளைக் குறிவைத்து அமெரிக்கர்கள் தாக்குதல நடத்தியதாகவும் -

அதில் சுமார் 140 பேர் வரை உயிரிழந்ததாகவும் -

கிராமம் ஒன்றில் மட்டும் சுமார் 50 சடலங்கள் வரை காணப்பட்டன என்றும் -

பெயர் குறிப்பிடாத தலிபான் அதிகாரி கூறியதாக ஆப்கானிஸ்தானில் இயங்கும் இஸ்லாமியச் செய்தி நிறுவனம் தெரிவித்தது. ஆயினும் இவற்றில் எந்தத் தகவலும் சுயாதீன வட்டாரங்களால் உறுதிப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

இதேசமயம்,

காபூல் விமான நிலையப் பகுதியில் அமெரிக்க விமானங்கள் வீசிய குண்டுகளில் ஒன்று, அருகிலிருந்த கிராமத்தின் மீது வீழ்ந்ததாகவும் - இதில் சில வீடுகள் தகர்ந்ததுடன் 12 வயதுச் சிறுவன் ஒருவனும் உயிரிழந்ததாகவும் - இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

நேற்றைய தாக்குதல்களில் காபூலுக்குக் கிழக்கே உள்ள விமானத் தளமொன்றும், தென் கந்தகாரில் இருந்த அரசுக் கட்டடங்களும் இலக்கு வைத்துத் தாக்கி அழிக்கப்பட்டதாகவும் -

பாகிஸ்தான் எல்லைக்கு மிகச் சமீபமாக அமைக்கப்பட்டிருந்த தலிபான் இராணுவப் பயிற்சி முகாம் நிர்மூலமாக்கப்பட்டதாகவும் -

அமெரிக்கத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை -

அமெரிக்காவின் முக்கிய நிலைகள் மீது கடத்தப்பட்ட விமானங்களினால் மோதித் தாக்கிய சம்பவம் இடம்பெற்று ஒரு மாதம் நிறைவடைந்ததை அடுத்து நேற்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், கொல்லப்பட்டவர்களின் நினைவாக நடத்தப்பட்ட வைபவங்களில் கலந்துகொண்டார்.

உலக வர்த்தக மையக் கட்டடம் இருந்த இடத்தில், இடிபாடுகளுக்கு இடையே பல மதகுருமார்கள் கலந்து கொண்ட வழிபாட்டு நிகழ்வொன்று நடத்தப்பட்டது. (ஐ-ஒ-10)

## மன்னிப்புச் சபை கோரிக்கை

விடுதலைப் புலிகள் இயக்கம் சிறுவர்களை தமது அமைப்பில் சேர்த்துக் கொள்வதை நிறுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

சிறுவர்கள் தாமாகவே முன்வந்து சேர்ந்து கொண்டாலும் அல்லது பலவந்தமாகச் சேர்க்கப்பட்டாலும் அது தவறு என்று மன்னிப்புச்சபை கூறியுள்ளது. (ஐ-ஒ-10)

## வேட்பாளர் பட்டியலில் புதிய முகங்களுக்கு இடம்

### ஜனாதிபதி பரிசீலிக்கின்றார்

கொழும்பு,ஒக்.12

எதிர்வரும் தேர்தலில் பொதுமக்கள ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்கள் பட்டியலில் புதுமுகங்களுக்கே அதிக இடமளிக்கப்படவிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் தேர்தலில் போட்டியிடவிருப்பவர்கள் தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் -

எந்தக் கட்சிகளுடன் கூட்டு வைப்பது என்பது பற்றி இதுவரை முடிவு செய்யவில்லை என்றும் -

ஜனாதிபதி தெரிவித்திருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-3)

### நியமனப் பத்திரம் தாக்கல் செய்ய முன்னர்

## அரசுத் தரப்பில் இருந்து மேலும் பலர் கட்சி மாறுவர்?

கொழும்பு,ஒக்.12

பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாக மேலும் பலர் அரசில் இருந்து வெளியேறி ஐ.தே. கட்சியில் இணைவர் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எஸ். பி. திஸநாயக்கா, மகிந்த விஜேசேகரா, விஜேபால மெண்டிஸ் மற்றும் எதிரிவீர பிரேமரத்ன, ஆனந்த முனசிங்க, ஜயசுந்தர விஜேக்கோன் ஆகியோர் ஏற்கனவே ஐ.தே. கவில் இணைந்து விட்டனர்.

ரொனி டி மெல், லக்ஷ்மன் கிரியல்ல, நந்தமித்ர ஏக்கநாயக்க, டலஸ் அழகப் பெரும, சரத் முனசிங்க, என். கே.ஈ.எஸ்.குணவர்த்தன போன்றோரும் விரைவில் ஐ.தே.கவில் இணைய விருப்பதாகக் கூறப்படுகின்றது. (ஐ-3-10)

### மலையகக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல மலையகக் கட்சிகளும் ஓரணியில போட்டியிட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

மலையகத்தில் உள்ள பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடி ஓரணியில் வேட்பாளர் களை நிறுத்த முயற்சி எடுக்கப்படும் என்று இரு தலைவர்களும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். (ஐ-3-10)

### அனுரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் வரிசையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அடுத்த நிலையில் உள்ளவர் அனுரா பண்டாரநாயக்காவே என்றும் -

சந்திரிகா குமாரதுங்க இரு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்துள்ளார். அடுத்த தடவையும் அவர் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட அரசமைப்பு இடமளிக்காததால் பண்டாரநாயக்கா குடும்பத்தைச சேர்ந்த மற்றொருவரை அந்தப் பதவிக்குக் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தல்கள் எழுந்துள்ளதாகவும் -

இதன் காரணமாக அனுரா பண்டாரநாயக்கா ஐ.தே.கட்சியை விட்டு தமது குடும்பக் கட்சியில் இணைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் - சில வட்டாரங்கள் தெரிவித்தன.

### யாழ்.நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டன.

முக்கிய சந்தைகளும் நேற்று இயங்கவில்லை. மருந்தகங்கள், எரிபொருள் விற்பனை நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

யாழ்.புறநகர்ப் பகுதியில் சில இடங்களில் நேற்றுக்காலை திறந்திருந்த கடைகளை மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் வீடியோப் படம் எடுக்க முயன்றனர். இதனையடுத்து திறந்திருந்த கடைகள் மூடப்பட்டன.

கடைகளையும், சந்தைகளையும் மூடுமாறு கேட்டு ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்கள் மூலம் பல இடங்களிலும் அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டன.

யாழ். அரச செயலகம் உட்பட அரச அலுவலகங்கள் நேற்று ஊழியர் வரவின்மையால் ஸ்தம்பிதமடைந்தன.

வடமராட்சிப் பகுதியிலும் நேற்று சந்தைகள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் இயங்கவில்லை.

இதேவேளை -

சுட்டுக்கொல்லப்பட்ட போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவின் ஊழியரின் இறுதிக் சடங்குகள் நேற்று நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.(ஐ-4-10-17-29-31-51-139-118-173)

## பின்லேடனின் உரைகளுக்குத் தடை!

இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் தொலைக்காட்சிகளில் உரையாற்றும்போது, சங்கேத மொழி மூலம் தனது அல்கெய்டா உறுப்பினர்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிக்கக்கூடும் என்று அமெரிக்க அதிகாரிகள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

இதனால் பின்லேடனின் உரைகளை தொலைக்காட்சிகளில் - குறிப்பாக அமெரிக்கத் தொலைக்காட்சிகளில் - ஒளிபரப்ப வேண்டாம் என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு நேற்று வேண்டுகோள் விடுத்தது. அல்கெய்டா அமைப்பின் தொலைகாட்சியில் பின்லேடனின் உரைகள் ஒளிபரப் பப்பட்டு வருகின்றன. அவற்றை அமெரிக்கத் தொலைக் காட்சிகள் மறுஒளிபரப்புச் செய்கின்றன. (ஒ)

### ஐ.தே.க. ஆட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த விஜேசேகரா மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும் இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:-

நாட்டின் இன்று முக்கிய தேசிய பிரச்சினையாக உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது உடனடி அவசரத் தேவையாகும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி தமிழ் மக்களுக்கு கூடுதல் அதிகாரத்தை வழங்க வேண்டியது அவசியம் ஆகும். கடந்த பல வருடங்களாக அரசில் அங்கம் வகித்து, அதிருப்தி அடைந்து, அரசில் இருந்து வெளியேறி எம்முடன் இணைந்துள்ளவர்களும் யுத்தத்தை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கும்படி எங்களிடம் கேட்டிருக்கின்றனர்.

யுத்தத்தை நிறுத்துவதே எனது முதலாவது பணியாகவும் முன்னுரிமை அளிக்க வேண்டிய விடயமாகவும் இருக்கும்.

பொ.ஐ.மு. அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். கடந்த தடவை நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட சமயம் அதை எதிர்கொள்ள முடியாத நிலையில் நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்தது அரசு. மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்த சமயம் நாடாளுமன்றத்தையே அரசு கலைத்து விட்டது. எனினும் இந்த அரசின் மீது நம்பிக்கையை இழந்து விட்டதை மக்கள் தேர்தல் மூலம் வெளிப்படுத்த இருக்கின்றனர்.

நாட்டில் சர்வாதிகார ஆட்சிக்கு நேற்றுடன் முடிவு கட்டப்பட்டுவிட்டது. எதிர்வரும் தேர்தலில் எமது கட்சி வெற்றிவாகை சூடி ஆட்சி அமைப்பது உறுதி - என்றார் ரணில் விக்கிரமசிங்க. (ஐ-3-10)

### நான்கு தமிழ்க்கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் வியூகங்களுக்கான ஒரு முயற்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகிய கட்சிகளை ஓரணியில் போட்டியிட வைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் சிலரும், ரெலோ அமைப்பின் தலைவர்கள் சிலரும் நேற்றுக்கூடி ஆராய்ந்துள்ளனர் என்றும் -

நான்கு தமிழ்க் கட்சிகளும் இணைந்து ஓரணியில் போட்டியிடுவது குறித்து இந்த இரு தரப்புக்களும் கொள்கையளவில் இணங்கியுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இரு கட்சிகளின் செயற்குழுக்களும் கூடி இது விடயமாக இறுதி முடிவை அடுத்த ஓரிரு தினங்களில் எடுக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டபோது "இது ஒரு வரவேற்கப்படவேண்டிய விடயம். இதற்கு எமது முழு ஆதரவும் கிடைக்கும்" என்றார்.

தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ்.குமரகுருபரனிடம் வினவியபோது, இதுவரையில் எவரும் தம்முடன் இது விடயமாகப் பேசவில்லை என்றும் -

ஆனாலும் இந்த விடயத்தில் தமது கட்சிக்கு ஆட்சேபம்இல்லை எனவும் தெரிவித்தார்.

இந்த நான்கு கட்சி கூட்டணி குறித்து சகல தரப்பிலும் இருந்து சாதகமான பதில் கிடைத்தால் அதில் இணையத்தயாராக இருப்பதாகவும் குமரகுருபரன் கூறினார்.

அம்பாறை, திருமலை, வன்னி ஆகிய மாவட்டங்களில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையில் இந்தத் தேர்தல் கூட்டணியை உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ஐ-3-10)




யேசுவே நன்றி

PRAISE THE LORD

கடந்த இரண்டு வாரங்களாக
எமது மறைமாவட்டத்தில் பொழிந்த அருள்மழைக்காக

ஆண்டவரே உமக்கு நன்றி!

நாம் ஆன்மீக விடுதலை பெற, எம் கவலைகள் நீங்க, எமது வாழ்வில் மனமாற்றம் காண, எம் உள உடல் நோய்களிலிருந்து நாம் விடுவிக்கப்பட



தூய ஆவியின் கொடைகளால் எம்மை நிறைத்த

இறைவா உமக்கு நன்றி!

இவ் ,றை நாம் பெற்றுக்கொள்ள உமது கருவிகளாக
எம் மத்தியில் நீர் அனுப்பிவைத்த

அருட்தந்தை அகஸ்ரீன் முண்டக்கட்

சகோ.தரகன் ஜோர்ஜ்



இவர்களுக்காக

யேசுவே உமக்கு நன்றி!

உமது ஆவியானவரின் பிரசன்னமும் வழிநடத்தலும்
தொடர்ந்து எமக்கு கிடைப்பதாக!

(93357)

இறைதியான இல்ல நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற நிறைவேற பல்வேறு வழிகளிலும் தமது மனமார்ந்த பங்களிப்பைச் செய்த இறைமக்களுக்கு எமது நன்றிகள்!

வசனோல்சவம்

இந்தியாவின் இறைதியான இல்லத்திலிருந்து வெளியாகும் மாதாந்த சஞ்சிகை 'வசனோல்சவம்' பெற விரும்புவோர் வசனோல்சவம், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் எனும் முகவரியோடு தொடர்புகொள்ளவும்.

யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம்.



கணக்கீடு
A/L 2003
கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம்பம்: நாளை 8.15 a.m.
S.தவா
B.Com. (Hons) (Acc.Spl.)
திகழ் கல்வி நிலையம்
இணுவில். (C/18655)

BRIGHTMAN
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர்.
தரம் 11 புதிய பாடத்திட்டம்
விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்
வினாவிடை வகுப்பு
By:- இரா.செல்வவடிவேல்
ஆரம்பம்:- 14/10/2001
(93341) Sun.-11.00 a.m.

கணக்கீடு
A/L 2002
பங்குடமை முடிவுக் கணக்கு
ஆரம்பம்: நாளை 10.30 a.m.
S.தவா
B.Com. (Hons) (Acc.Spl.)
வாணி கல்வி நிலையம்
சுன்னாகம். (C/18654)

PERSONAL CLASS
ஆறுமுகம் ஒழுங்கை. கல்வியங்காடு.
A/L கணக்கீடு
A.KALAICHELVEN
B.Com. Acc. (Sp.)
2003 "சொத்து முடிவு செய்தல்"
ஆரம்பம்:-
13.10.2001 சனி 3.00 மணி
(C/18653)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்
பிரத்தியேக வகுப்பு
பௌதிகவியல்
சூடும் கதிர்ப்பும்
சனி, ஞாயிறு 5 - 6 (O.T.)
M. KARUNANITHY
(93345) B.Sc. (Spl.)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.